தென்மொழி

நாளையே விடுதலை!

எழுக தமிழனே! இனநலம் கருதுக!
கொழுந்துவிட் டெரியும்உன் குலக்கனல் பெருக்குக!
உன்றனை விடுதலைக் கொப்புவித் திடுக!
பின்வரும் தமிழருன் பெற்றியைப் புகழ்வர்!
வடக்குக் கதவினை இறுக்கிப் பூட்டுக!
இடக்குசெய் ஆரிய இனக்கொழுப் புருக்கு!

இழிவுக்குத் தீவை! ஏற்றப் படியமை!
அழிவுசெய் அடிமைத் தளைகளை உடைத்தெறி!
உணர்வுகொள்! உறுதிகொள்! உயிரைப் பணயம்வை!
திணவுத் தோள்களால் வெற்றியைத் திருப்பு!
நாளையே விடுதலை நண்ண
காளையே! களிற்றின் கன்றே! கனல்கனே!

சுவடி: 7 ஓலை-2
மீனம்-தி. பி. 2000

உரு 75 காசு

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்

www.thamizham.net - Free E book No 7414

நமக்குவந்த மடல்கள்.

O ஆசிரியர் அவர்களுக்கு! தாங்கள் எழுதிய இரண்டுமாத ஆசிரியவுரைகளையும் மிக்க கவனத்தோடு படித்துப்படித்து ஆராய்ந்து பார்த்துவிட்டு எழுதுகின்றேன். அண்ணாவைப் புகழ்ந்து எழுதுவது போல் எழுதிக் குறைவான எண்ணத்தை வெளியிட்டீர். சென்ற இதழில், 'புதியஅமைச்சரவை' என்ற பொருளில், பொருளும் பொருத்தமும் இல்லாமல் கண்டபடி எழுதியுள்ளீர். இரண்டு உலகத் தமிழ் மாநாடுகளையும் மிகவும் இழிவான முறையில் வக்கணை செய்து எழுதியுள்ளார் பாவாணர். உங்களால் தமிழை வளர்க்க முடியாது. தமிழை வளர்க்க உயிரைக் கொடுத்துப் பெருமை தேடித்தந்த அண்ணாவையும் அவரது செயலையும் குறைத்து மதிப்பிட்ட நீங்கள் தமிழை எப்படி வளர்க்க முடியும்? உங்களால் தமிழ் தாழ்ந்துதான் போகும்; என்றும் உயராது. உணர்ந்து கொண்டு வருந்துவீரா? தென்மொழி வாங்குவதை நிறுத்திவிட்டேன்.

ஆ. க. சண்முகம், பண்ணுருட்டிசாலை, நெய்வேலி-1.

O தமிழ்த்தானைத் தலைவ! வணக்கம். 'தொலைபேசி' அறிவியல் நாடகம் மிக்க சுவையுடையதாயிருந்தது. ஆசிரியவுரை, மற்றும் மொழிப்பெரும் புலவரின் கட்டுரை போல்வனவற்றில் காணப்பெறும் உண்மைகள் பல கசப்பாக இருந்தாலும், உண்மை கசக்கத்தான் செய்யும்! இனி வேறு யாரையும் நம்பிப்பயனில்லை. தன்மானம் காக்கப்பெற தனியாளாகவே தனது திறனுக்கேற்ப அவனவன் வினையாற்ற முனைய வேண்டியதுதான்.

—பெ. வெற்றிக்கூத்தன், தொலைபேசித்துறை, குறிஞ்சிப்பாடி.

O புதிய அமைச்சரவை பற்றி நினைக்கையில் எந்த வகையானும் உள்ளம் தெம்பு பெறுவதில்லை...இந்நிலையில் எந்தமிழர் உள்ளத்திற்கு உரமிட்டு, உணர்வெழுச்சித் தீயினுக்கு நெய்யூட்டி, நடைப்பிணமாய் வாழும் கடையருக்கும் உயிரூட்டும் தங்கள் உள்ளமும் சோர்வுற்றதென்றால் வருங்காலத்தை எதிர்நோக்கவும் அஞ்சவேண்டியுள்ளது...தாங்கள் தளர்ந்திட வேண்டா. நம்பிக்கை யொன்றினையே பற்றுக்கோடாகக் கொண்டு நாளைய புதிய தமிழகத்தைப் படைத்திடச் செயலாற்றுங்கால் எதற்கும் எவர்க்கும் அஞ்சவேண்டா. துணிவுடன் தொடர்வோம். —சி. தமிழ்வென்றி, நெல்லை-4.

O ஒண்டமிழ்காக்கும் செம்மல் ஏறே! தென்மொழியைத் தொடர்ந்து மூன்றுண்டுகளாகப்படித்துவரும் அன்பர்களில்யானும்ஒருவன். இதழில் அரசியல் கலக்காமல் இருத்தல் மிகவும் நன்று. 'என் இயக்கம்' என்று ஏட்டை நிரப்புகின்றீர்கள். எங்களைப் போன்று தமிழே உயிராக உள்ளவர்களின் இயக்கம் என்ன ஆவது?

—இரா. பெரியண்ணன், புதுப்பட்டி, சேலம் மா. வ.

O அன்புசான்ற ஐயா! தாங்கள் சோர்ந்துள்ளதாக அன்பர் கூறினார். தங்களின் சோர்வு என் போன்றவர்களுக்கு வாழ்க்கையின் மீது மிகமிக வெறுப்படையச் செய்கின்றது. தாங்கள் சோர்வடைந்தால் தமிழனுக்கு, தமிழுக்கு, தமிழ் நாட்டிற்கு இனி எக்காலத்தில் விடிவேற்படப் போகிறது?

—தங்களை நம்பியே வாழ்ந்துவரும் தம்பி, தமிழநம்பி,
அறங்கண்டநல்லூர்.

(தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம்)

www.thamizham.net - Free E book No 7414

தென்மொழி

"கெஞ்சுவதில்லை" பிறர்பால்! அவர்செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

சுவடி-7: ஓலை-2

மீனம் தி. பி. ௨௦௦௦ (1969-மார்ச்சு-ஏப்பிரல்)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழியின் அச்சகம், கடலூர்-1.

விடுதலை பெறுவது முதல்வேலை!

'தமிழகம் விடுதலை பெறவேண்டும்'—என்ற கருத்தே நம் நாட்டிலுள்ள அரசியல் கட்சிக் காரர் சிலர்க்குப்பெருத்த எரிச்சலை மூட்டுவதாகும். அதற்கவர் சொல்லும் கரணியங்கள் வியப்பானவையாகும். முதலில் "தமிழகம் எங்குக் கட்டுப் பெற்றுக் கிடக்கின்றது? தமிழகம் உட்பட இந்தியா முழுவதுமே அண்மையில் தானே வெள்ளைக்காரன் கைகளினின்று மீட்கப் பெற்று உரிமை எய்தியது! உரிமை பெற்றபின் நமக்கென்று ஒரு குடியரசமைப்பையன்றோ அமைத்துக் கொண்டுள்ளோம்? இவ்வமைப்பின்கீழ் உள்ள நிலத்தின் எந்தப் பகுதியும் அடிமையுற்றுக் கிடக்கின்றது என்பது பொருளற்றதே. அவ்வாறு அடிமையுற்றுக் கிடக்கும் ஒரு நிலப்பகுதியன்றோ விடுதலையுரிமைக்குப் போராடலாம்? தமிழகம் எப்படி அடிமை நாடாகும்?" —என்பது அவர்களின் எதிர்வினாவாகும். இத்தகையவர்கள் விடுதலை என்ற சொல்லின்

www.thamizham.net - Free E book No 7414

பொருளேயே சரிவரப் புரிந்து கொள்ளாதவர்களாவர். புரிந்து கொண்டாலும் ஒப்புக் கொள்ளாதவர்களாவர். இத்தகையவர்களுக்கும், இவர்தம் மதிமயக்கமான பேச்சுகளினுல் கட்டுண்டு தமக்குத்தாமே அடிமையுற்றுக் கிடக்கும் பேதைத் தமிழர்க்கும் முதற்கண் விழிப்பூட்டியாகல் வேண்டும்.

ஓராட்சிக்குள் அடங்கும் தனி மாந்தன் ஒருவனின் உரிமைகள் என்பவை வேறு; கூட்டுமாந்த உரிமைகள் என்பவை வேறு. வெள்ளேக்காரன் நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்தான் என்று சொன்னுல், நம் ஒவ்வொருவரின் கைகால்களிலும் இரும்பு விலங்குகளே மாட்டி நம் குடுமிகளேப் பிடித்து அவன் எப்பொழுதுமே ஆட்டிக் கொண்டிருக்கவில்லே. நம் தனிப்பட்ட இயக்கங்களே நாம் உண்ணுவது, உறங்குவது, உடுத்துவது, மனேவி மக்களுடன் உறவாடுவது போன்றவற்றின் ஈடுபாடுகளே அவன் தடை செய்து வைத்திருந்தான் என்பதிலும் பொருளில்லே. மாருக இவைபோன்ற எல்லா வகையான இன்ப நுகர்ச்சிகளுக்கும் அவன் ஆட்சிக் காலத்தில் பெரிதும் நல்ல வாய்ப்புகளேயே ஏற்படுத்திக் கொடுத்திருந்தான். நம் கல்விக் கண்களேயும் திறந்து நம்மைப் பற்றியிருந்த அறியாமை இருளேயும் ஓட்டுதற்கு அவன் பெரிதும் உதவி யிருந்திருக்கின்முன். அப்படிப்பட்ட நிலேயில்—அவன் நம்மை அடிமைப் படுத்தி வைத்திருந்தான் என்று சொல்வதற்கே தனிப்பட்ட ஒருவனேப் பொறுத்தமட்டில் எந்த ஓர் அடையாளமுமே இல்லாத நிலேயில்-அவனுக்கு நாம் அடிமைப்பட்டுக் கிடந்தோம் என்று ஏன் சொல்லிக் கொண்டிருந்தோம்?

அவன் நமக்கு—தனிப்பட்ட நம் ஒருவருக்கு என்ன வகையான நன்மை செய்திருந்தாலும், நம் எல்லாருக்கும் வேண்டாதவனுக இருந்தான் என்பதைக் கருதியே அவன் நம்மை அடிமைப்படுத்தியிருந்தான் என்று கூறவேண்டியிருந்தது. நாம் எல்லாரும் சேர்ந்து அவனே ஒன்றும் கேட்க முடியாது. நம் எல்லாரைப் பற்றியும் நாமே எண்ணி முடிவு கட்டிக்கொள்ள முடியாது. அவன் உதவியின்றி நம் எல்லாராலும் எங்கும் செல்ல முடியாது. நம் எல்லாருக்கும் சொந்தமான இந் நிலப்பகுதியில் ஒரு துண்டு நிலத்தை வெட்டியெடுத்துக் கப்பலில் போட்டு இங்கிலாந்துக்குக் கொண்டு போனுலும் நாம் அவனேப்போய் ஏன் அப்படிச் செய்கிருய் என்று கேட்க முடியாது. இங்கிருந்த பொன்னேயும் பொருளேயும் வாரிக் கொண்டுபோய் அவன் நாட்டில் குவித்துக் கொண்டாலும் அவன் பார்த்து ஏதாவது கொடுப்பதை நாம் பெற்றுக் கொண்டாலொழிய, நாமாகப் போய் அவன் கொண்டுபோனவற்றைப் பிடுங்கிக் கொண்டு வரமுடியாது. நம்மை முன்னேற்றிக் கொள்ளக்கூடிய எண்

www.thamizham.net - Free E book No 7414

ணங்கள் நம் மனத்தில் தோன்றினாலும் நாம் அவற்றை மற்றவர்களுக்குச் சொல்ல முடியாது. அவற்றைச் செய்தித் தாள்களில் எழுதிப் பரப்பிவிட முடியாது. நாம் எழுதுவதற்கும் பேசுவதற்கும் அவன் ஒப்புக்கொண்டால்தான் ஆயிற்று; இல்லையென்றால் நாம் எழுதாமலும் பேசாமலும் ஊமை நாடகந்தான் போட்டுக் காட்டிக் கொண்டிருக்க முடியும். ஆனால் இத்தனைத் தடைகள் இருந்தாலும் அவன் நமக்குச் சோறு போட்டான். இங்கிலாந்திலிருந்து நம் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைக் கப்பல் கப்பலாக ஏற்றிக் கொண்டு வந்து நமக்குக் கொடுத்தான்; உடைகளை நன்றாக உடுக்கக் கற்றுக்கொடுத்தான். இருந்தாலும் இவற்றிலெல்லாம் நாம் நிறைவுபெற்று விடாமல், நம் குடுமி என்னவோ அவன் கையிலிருப்பது போன்ற உணர்ச்சியே நமக்கிருந்து வந்தது. நம் கைகால்களைக் கட்டிப்போட்டு வைத்துக் கொண்டு நமக்குச் சோறு போட்டுக் காப்பதுபோன்ற உணர்ச்சியே நம் எல்லாருக்கும் இருந்தது. எனவே நாம் அவனுக்கு அடிமையுற்றுக் கிடப்பதாகக் குமுறினோம்; குமைந்தோம்; புழுங்கினோம்; பேசினோம்; எழுதினோம்; இறுதியாக அவனிடமிருந்து நாம் விடுதலை பெற்று விட்டதாக ஒரு கால் பகுதித்தாளில் எழுதி வாங்கிக் கொண்டு அவனைக் கப்பலேற்றி இங்கிலாந்துக்கு அனுப்பி விட்டோம்.

அந்தக் கால் தாளை நாம் (நாம்கூட அன்று; நமக்காக யாரோ ஒருவர்) வாங்கிக் கொண்டவுடன், நமக்கென்னவோ நம் கைகால்களில் உள்ள விலங்குகளெல்லாம் தகர்க்கப்பட்டன போன்ற ஓர் இன்ப உணர்ச்சி இருந்தது; உரிமை உணர்ச்சி இருந்தது. இந்த மகிழ்ச்சியில் நாம் ஆடினோம்; பள்ளுப் பாடினோம்! ஆரவாரம் செய்தோம். ஆனால் அதன் பின்னும் நமக்குப் பசித்துகொண்டுதான் இருந்தது; உடை தேவையாகத்தான் இருந்தது; நாமும் உழைத்துக்கொண்டுதான் இருக்கவேண்டியிருந்தது. நாம் இந்த உலகில் எந்த மூலையில் பிறந்திருந்தாலும் உழைத்துத்தான் ஆகவேண்டும்; சாப்பிட்டுத்தான் ஆகவேண்டும். தொல்லைப்பட்டு வாழ்ந்துதான் ஆகவேண்டும். இவற்றிலிருந்து எவனும் நம்மை விடுதலை செய்துவிட முடியாது. ஆனால் இவற்றைப்பற்றியெல்லாம் விளங்கிக் கொள்ளாத நம் தலைவர்கள் அன்றெல்லாம், "வெள்ளைக்காரனை நாம் ஓட்டிவிட்டால் நம் ஆற்றிலெல்லாம் தண்ணீருக்கு மாறாகப் பால் ஓடும்; நெய்யோடும்; நம் மலைகளில் கொட்டிக் கிடக்கும் கல்லெல்லாம் பொன்னாகும்; கடுகெல்லாம் மலையாகும்" என்றெல்லாம் கனவுகண்டு கிளுகிளுப்பை மூட்டிக் கற்பனைவளம் பொங்கப் பேசினார்கள். ஆனால் வெள்ளைக்காரன் போனபின் நம் ஆறுகளில் பால் ஓடவில்லை; நெய்யும் ஓடவில்லை; இருந்த தண்ணீரும் வற்றிப்போனது. கல்லெல்லாம் பொன்னாக வில்லை; கடுகும் மலையாக

வில்லை; நம் பெண்டு பிள்ளைகள் காதுகளிலும் மூக்குகளிலும் போட்டுக் கொண்டிருந்த கடுக்கத்துணைப் பொன்னும் பறிபோய்விட்டது. பின் என்னதான் பயன்? உரிமை பெற்றது எதற்கு? விடுதலை பெறுவது எதற்கு? இந்தக் குழப்பங்களிலிருந்துதான் நாம் உண்மையை உணர்ந்தாக வேண்டும். அந்த உண்மைகள் என்பவை எவை? உரிமைகள் என்பவற்றிற்கு என்ன விளைவு? விடுதலைக் கனியின் சுவை என்ன? அதன் பரிமாணப்பொருள் எது? தமிழனுக்கும் அது தேவைதானா? இவற்றை முதலில் விளங்கிக்கொள்வோம்.

மக்களினத்தைப் பொறுத்தவரையில் ஒருண்மையை முதன் முதலில் நன்றாகப் புரிந்து கொள்ளுதல் வேண்டும். இந்த மக்களினம் என்றைக்கும் பழக்க வழக்கத்திற்கு அடிமையுற்ற இனமே! இந்தப் பழக்க வழக்கந்தான் நமக்கு அறியாமையாகவும் இருப்பது; அறிவாகவும் இருப்பது. நாம் அறியாத ஒன்றைத் தவறாகவும் அறிந்த ஒன்றைச் சரியாகவும் கருதிவிடுகின்றோம். எடுத்துக்காட்டாக, நாம் கண்டு அறிந்த சிவவடிவம், மால்வடிவம் முதலிய வடிவங்களையே இறைவன் உருவங்கள் என்று நம்புகின்றோம். ஏசுநாதரையும், புத்தரையும் மக்களில் உயர்ந்தவர்கள் என்றே நினைக்கின்றோம். இனி, ஏசுநாதரையும், புத்தரையும் வழிபடுபவர்கள் நாம் வணக்கும் வடிவங்களை இறைவனுடைய என்று ஏற்பதில்லை. இவ்வாறு பழக்க வழக்கமே நமக்கு அறிவாகிறது. நமக்குப்பழக்கமும் வழக்கமும் அல்லாதது அறிவில்லாததாகி விடுகின்றது. இந்த உண்மை நம் எல்லா வகையான இயக்கங்களிலும் ஊடுருவி நிற்கின்றது. இந்த உண்மையின் அடிப்படை நம்மை எங்குக் கொண்டுபோய் விட்டுவிடுகின்றது தெரியுமா? நம்மை நாமே அடிமைப் படுத்திக்கொள்ளும் ஓர் அறியாமைப் படுகுழியிலே கொண்டுபோய்த் தள்ளிவிடுகின்றது. எனவே நாம் எதைப்படித்தாலும், எதை எண்ணினாலும் நம் பழக்க அடிமைத் தனத்தினின்று விடுபடவே மறுத்து விடுகின்றோம். இந்த அமைப்பின் புறச் செய்கையாகத்தான் நாம் அரசியல் அமைப்பிலிருந்தும் குமுகாய அமைப்பிலிருந்தும் நம்மை முன்னேற்றிக் கொண்டு செலுத்த முடியாமல் அழுந்திப்போய் விடுகின்றோம். இதனாலேயே விடுதலையுணர்வு என்று நாம் கேள்விப்பட்டவுடன் நாம் உழைக்காமல் உண்டுவிட முடியுமா? பாய்போடாமல் படுத்துக்கொள்ள முடியுமா? என்றெல்லாம் கற்பனை செய்யத் தொடங்கி விடுகின்றோம். அரசியல் தலைவர்களும் நம் அறியாமையைப் பயன்படுத்திக் கொண்டு விடுதலையுணர்வையும், உரிமை எய்துவதையும் நம் கண்பார்வைக்கும் காதுப்பறைக்கும் தக்கபடியான கோணங்களில்—பரிமாணங்களில் உருவாக்கிக் காட்டுகின்றனர். ஆனால் விடுதலை என்பது என்ன?

www.thamizham.net - Free E book No 7414

அதுதான் ஒவ்வொரு மாந்தனின் உயிர்ப்பயன். ஒவ்வோரினத்தின் இயக்க முடிவு. ஒவ்வொரு நாட்டின் இறுதி அரசியல். மொத்தத்தில் உலகின் இறுதிக் கொள்கை. அங்கு நாம் உழைக்கலாம்; உண்ணலாம்! உழைக்கவும் தடையிருக்கக் கூடாது; உண்ணவும் தடையிருக்கக்கூடாது. மாந்தன் மலையை வெட்டிக் கடலில் போடலாம்; கடல்நீரை வயலுக்குப் பாய்ச்சிக் கொள்ளலாம்; என்ன விரும்புகின்றானோ அதைப் படிக்கலாம்; எதை விரும்புகின்றானோ அதை எழுதலாம். எப்படி வாழ விரும்புகின்றானோ அப்படி வாழலாம். அதற்காகத் தன்போல் ஒருவன் அப்படிச் செய்வதை இவன் தடுக்கவும் கூடாது; இவன் விருப்பத்தை இன்னொருவன் தடுக்கவும் கூடாது. இந்த அமைப்பை இவனே ஒருவகையான கோணத்தில்—ஒரு பரிமாணத்தில் அமைத்துக்கொள்ள இவனுக்கு உரிமையிருக்க வேண்டும். இவ்வுரிமைக்கு எவன் தடையாக இருக்கின்றானோ அவன் இவனின்று மாறுபட்டவன். அவன் கோணம்— பரிமாணம் எல்லாமே இவன் கோணத்திற்கும் பரிமாணத்திற்கும் மாறுபட்டன. இப்படி ஒருவனன்றி ஓரினமே இயங்குமானால் அவ்வினத்திற்குப் பிறிதோர் இனம் மாறுபட்ட இனம். அந்த இனமும் இந்த இனமும் தனித்தனி இயக்கம் உடையன; தொடக்கம் உடையன; முடிவு உடையன; பயன் உடையன.

இவ்வாறு இன்றி உலக மாந்தரனைவரும் ஒரே யியக்கமும் ஒரே வகையான பரிமாணமும் உடையவராக நாம் கருதிக் கொள்வதைப் போன்ற அறியாமை வேறு இல்லை. இப்படி நான் கூறும் கருத்துப் புதிய உலக அமைப்புக்கு எள்ளளவும் மாறுபட்டதில்லை. இன்னுஞ் சொன்னால் அந்த அமைப்புக்குப் புதிய வடிவம் கொடுப்பது; புதிய வலிவூட்டுவது; வரப்போகும் பல புதிய சிக்கல்களை விடுவிப்பது. முதலில் ஒன்றை நாம் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும். உலக மக்களினம் ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு பண்பு, அமைப்பு, இயக்கம், இயல்பூக்கம் முதலியன உண்டு என்றால்—அவற்றில் ஒவ்வோரினமும் பிறிதொன்றிற்கு வேறுபட்டுக் கிடக்கின்றது என்றால், ஒன்றையொன்று பகைத்துக்கொண்டுதான் கிடக்கவேண்டும் என்பதில்லை. எருமைகளும் மாடுகளும் ஒன்றையொன்று முட்டிக்கொண்டும் மோதிக்கொண்டுந்தான் நடக்க வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. ஆனால் அவை வெவ்வேறு இனங்களே! இவ்வேறுபட்ட உணர்வை ஒன்றுபோல் கருதுவதென்பது வேறு; ஒன்றாக்கி விடுவதென்பது வேறு. ஒன்றுபோல் கருதுவதென்பது அறிவால் நமக்குக்

www.thamizham.net - Free E book No 7414

கிடைத்த பயன்; ஒன்றாக்கி விடுவதென்பது அறியாமையால் நாம் கண்ட இருள்; துயரம்! எந்த வகையான அறிவியல் உலகம் வந்தாலும் உலக மாந்தர் எல்லாரும் ஒரே வகையினர்; இனத்தினர் என்ற தன்மை வரவே வாராது, அவரவர்களின் உறுப்புகளும் பிறவும் ஒன்று பட்டே இருக்கும். உணர்வு வேறுபட்டுத்தான் இயங்கும். இந்த உணர்வு நிலைக்கொப்ப அறிவு கலக்கப் பெற்றதோர் இயக்கமே மாந்தரை வேறுபிரிக்கின்றது. நாம் எல்லாரும் ஓரினந்தான்; ஆனால் பல்வேறு பிரிவினர். இப்பிரிவு நிறத்தினடிப்படையிலோ 'சாதி'யின் அடிப்படையிலோ அமைந்ததன்று; நிலத்தின் அடிப்படையில் அமைந்ததாகும். மூலத்தோற்றத்தின் அடிப்படையில் அமைந்த தாகும்! அறிவியல் முன்னேற்றத்தின் எந்தப் புள்ளியிலும் ஓர் உருசியனும் ஒரு சப்பானியனும் ஒன்றாகி விடுவதென்பது தவறு. இந்நிலையை நாம் மிக நன்றாக மிகத் துல்லியமாகப் புரிந்து கொண்டால், வேறுபாட்டுணர்வுக்கே, பகையுணர்ச்சிக்கே இடமில்லாத வகையில் புரிந்து கொண்டால், ஓரினத்தைப் பிறிதோர் இனம் அடிமைப்படுத்தியோ, ஒன்றின் இயக்கத்துக்குள் பிறிது ஒன்றை அடக்கிக் கொண்டோ வாழ்வது என்பது குற்றமாகவும் கொடுமையாகவும் கருதப்படும்.

இந்த ஒருண்மையை நாம் நன்றாக விளங்கிக் கொள்ளுதல் வேண்டும், நிலைத்திணையியலில் எப்படிப் பூண்டினமும், புல்லினமும் தண்டினமும் மரவினமும் பகுக்கப் பெறுகின்றனவோ, விலங்கியலில் எப்படிக் குதிரையினமும், நாயினமும், யானையினமும் பகுக்கப் பெறுகின்றனவோ அப்படியப்படி மாறுபாடுற்று விளங்குகின்றனவேயன்றி ஒரேயினத்துள் வேறுபாடுகள் கொண்டு இவை விளங்கவில்லை! குதிரையொன்றையும் அதன் இனத்தினதான கழுதையொன்றையும் இணைத்து எவ்வாறு கோவேறு கழுதையை நாம் படைத்துக் கொள்ள முடியுமோ, அப்படியே இந்தியனையும் சீனனையும் இணைத்து இந்தோசீனனையும், இந்தியனையும் ஐரோப்பியனையும் இணைத்து இந்தோஐரோப்பியனையும் நாம் உருவாக்கிக் கொள்ளலாம். அதனால் இந்தியனும் சீனனும் இந்தோசீனனும் இந்தோ ஐரோப்பியனும் ஓரினத்தவரல்லர், தனித்தனி இனத்தவரே. இப்படிப் பகுப்பதில் நமக்கு வேறுபாட்டுணர்வுதானே மிகும்; ஒற்றுமையுணர்விற்கு இடம் உண்டாவது எப்படி என்றால், இந்தியனும் சீனனும் வேறுவேறு என்று சொல்வோமே தவிர, இந்தியனைவிடச் சீனன் உயர்ந்தவன்

www.thamizham.net - Free E book No 7414

என்றோ, தாழ்ந்தவன் என்றோ நாம் சொல்லுதல் கூடாது. உயர்வு தாழ்வு என்பது அறிவாலும், உழைப்பாலும், பண்பாட்டாலும், நாகரிகத்தாலும் கருதப்படுவது. ஆனால் அவ்வாறு கருதப்பெறும் உணர்வுகளிலும் கசப்புச்சுவை இருத்தல் கூடாது. இங்கு நாம் முகாமைபாகக் கவனிக்க வேண்டியது, இக்கட்டுரையின் கருத்துப் பொருளாக நாம் மதிக்க வேண்டியது என்ன வென்றால் ஓரினத்தின் வாழ்வு இன்னோரினத்தின் கைகளில் ஒப்படைக்கப் படக்கூடாதென்பதுதான். இதையே சற்று அறிவியல் விளக்கமாகக் கூறினால், ஓரினத்தை, அல்லது பல இனங்களை ஆட்சிசெய்யும் உரிமை, பிறிதோர் இனத்தின் அல்லது பிறிதோர் இனத்தின் நலத்தைமட்டுமே கருதக்கூடிய ஒருவரின் அல்லது ஓரினத்தின் கைகளில் ஒப்படைக்கப்படக் கூடாது என்பதே!

இந்த உண்மையை அடிப்படையாகக் கொண்டுதான் விடுதலையுணர்ச்சியின் பரிமாணப் பொருள் எழுதப் பெறுதல் வேண்டும். உரிமையுணர்வின் அறிவியல் பொருள் கூறப்பெறுதல் வேண்டும். இதில் இன்னொரு கருத்தும் கவனிக்கப்படுதல் வேண்டும். உரிமை வேண்டும் இனம் என்னென்ன குறைகளைக்கூறி உரிமை கேட்கின்றது என்பதும் அதேபோல் உரிமை தரவேண்டிய இனம் என்னென்ன நிறைகளைக்கூறி உரிமைதர மறுக்கின்றது என்பதுமே அது. இப்பொழுது இதுவரை நாம் ஆராய்ந்த கருத்துகள் அனைத்தையும் வைத்து நாம் வெள்ளைக்காரனிடம் உரிமைகேட்ட வரலாற்றை நினைவு கூர்வோமானால் நமக்கு விடுதலையுணர்வின் அகரவரிசை தெரிந்துவிட்டது போன்ற ஒருணர்வு ஏற்படும். அதுதான் இது. அஃதாவது விடுதலை என்பது வயிற்றுப் பசியில்லாமலிருப்பதற்கோ, உழைக்காமல் உண்பதற்கோ கேட்கப்படுவதன்று. அப்படியானால் நாம் விடுதலையே கேட்டிருக்க மாட்டோம். பின் விடுதலை என்பது எது? அது நம் மான உணர்வில் பழுத்த பயனுடைய கனி. அது நம் வயிற்றை நிரப்பாது; உணர்வின் நரம்புகளை நிரப்பும். உழைக்காமல் உண்ண வைக்காது; உழைப்பது மிகுந்து உண்பது குறைவாக இருந்தாலும் அது நம் நெஞ்சத் துடிப்புக்கு நிறைவளிப்பதாகும். எனவே வயிற்றைநிரப்பி வாழ்க்கையின் உள்ளுணர்வை நிரப்பாமல்இருப்பதே விடுதலை என்று ஆகாதபொழுது வயிற்றையும் நிரப்பாமல் வாழ்வின் உள்ளுணர்வுக்கும் பொருந்திவராத இன்றைய ஆட்சியை நாம் எப்படி விடுதலையாட்சி என்று கருதுவது? இதையும் சிலர் விடுதலைதான் உரிமையாட்சிதான் என்று கருதுகின்றார்களே என்றால், அவர்கள் ஒருவேளை வயிறுமுட்ட உண்பதாலும் கள்ளக்காசு அடிக்க முடிவதா

www.thamizham.net - Free E book No 7414

லும் ஏழ்மையினத்தைச் சுரண்டிவாழ வழியிருப்பதாலும், தான் மட்டும் மேலானவன் என்ற பட்டயம் தீட்டிக்கொள்ள முடிவதாலுமே அவ்வாறு கருதலாம்; நடக்கலாம். அவ்வாறு இல்லாத இருக்கமுடியாத பிறர் எப்படி இந்த ஆட்சியை விடுதலை ஆட்சி, தன்னுரிமை ஆட்சி என்று கருதிக்கொள்ள முடியும்?

எனவே நம்மைப் பொறுத்தவரை, தமிழர்களாகிய நம் இனம், நம்மினும் வேறுபட்ட, முற்றிலும் மாறுபட்ட வடவாரிய இனங்களினால் ஆளப்படுவதும், அதன் பொருட்டு மாளாவிருப்பதும் விடுதலை பெறும் இன்றியமையாமையை வலியுறுத்துவதாகும். அரசியலில், பொருளியலில், குமுகாயவியலில், பண்பாட்டியலில் நமக்குப் பொருந்திவராத ஓர் ஆட்சி, குடியாட்சி என்று இயங்கினாலும் சரி, முடியாட்சி என்று கூறப்பெற்றாலும் சரி, நம் உரிமைகளைப் பெறும் பொருட்டு நாம் பெற விரும்புவது, பெறவேண்டுவது விடுதலையே. இன்னும் விரிவாகவும் விளக்கமாகவும் சொன்னால் இந்தியக் குடியரசாட்சியினின்று. நாம்—தமிழர்களாகிய நாம், நம் நாட்டை—நம் இனம் புரவிய இந்நிலத்தை—இந்நிலத்தில் உள்ள மக்களின் நலத்தை, இந்நலத்தின் அடியொட்டி விளையும் வாழ்க்கை வளத்தை உண்மையிலேயே நம்முடையனவாக்கிக் கொள்ளவேண்டுமென்பதுதான் நாம் கூறும் விடுதலைக்குப் பொருளாகும்.

நம் துயரங்கள் மலைபோல் வளர்ந்துவிட்டன; நம் தேவைகள் கடல்போல் பெருகிவிட்டன; நம் இழிவுகள் இன்று கூட்டித் தூய்மை செய்யமுடியாத அளவுக்கு மேலும் மேலும் மண்டிவிட்டன. பேச உரிமையற்று விட்டோம்; எண்ண உரிமையற்று விட்டோம்; நம்மைக் குமுகாயத்தின் அடித்தளத்தில் கொண்டுவந்து நிறுத்திவிட்டோம். நமக்குப் பசி பெரிதுதான்; ஆனால் பசி மட்டும் பெரிதில்லை; சோறு தேவைதான்; ஆனால் சோறே தேவையில்லை. நமக்கு வறுமையுண்டு; துயரம் உண்டு; போராட்டம் உண்டு; ஒற்றுமை எண்ணம் உண்டு! ஆனால் அவைபோலவே நமக்கு மானமும் உண்டு! நம்மை நம் இனமல்லாத, நம் இனத்தின் நலம் பாராட்டாத எவனும் ஆளுதல்கூடாது ஆம்! நாம் வடவனுக்கு—ஆரியனுக்கு என்றுமே அரசியலிலும் குமுகாய அமைப்பிலும் அடிமைகளல்லர்! உரிமைபெற வேண்டியவர்கள். விடுதலை வேண்டுபவர்கள். இதனை மறுக்கும் உரிமை எவருக்கும் இல்லை. அறிவின் பெயரால், அறிவியலின் பெயரால் இதனைப்பெற வழியில்லை என்றால்; வலிவின் பெயரால் நாம் இதனைப் பெற்றே ஆகல் வேண்டும். என் உடன்பிறந்த தமிழனே! நீ என்ன சொல்கின்றாய்?

விழி; எழு; நட!

www.thamizham.net - Free E book No 7414

திருவள்ளுவர் காலம்.

—மொழியியல் ஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர், க. மு.

முதலிரு கழக இலக்கியமும் அழிக்கப்பட்டபின், தமிழ் நாகரிகத்தையும் பண்பாட்டையும் தாங்கிக்கொண்டிருக்கும் இருபெரு நூல்களுள் ஒன்றான திருக்குறளின் காலம், அதை இயற்றிய திருவள்ளுவரின் காலம, இன்ன நூற்றாண்டில் இன்னவாண்டிலிருந்து இன்னவாண்டுவரை என்று திட்டவட்டமாய்க் கூறுதற்கியலாவிடினும், தொல்காப்பியர் காலமாகிய கி. மு. ஏழாம் நூற்றாண்டிற்கும் கடைக்கழக முடிவாகிய கி. பி. 3-ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்டதாய்க் கிறித்துவிற்கு முந்தியதென்று கொள்வது, பெரும்பாலும் குற்றத்திற்கிடமில்லாததும் ஏறத்தாழ உண்மையை ஒட்டியதுமாகும்.

திருவள்ளுவர் காலம் தொல்காப்பியத்திற்குப் பிந்தினதென்பதற்குச்சான்றுகள்:

1. தொல்காப்பிய நூற்பாக்களையும் மாந்தர்ப்பகுப்பையும் திருவள்ளுவர் தழுவியிருத்தல்.

திருவள்ளுவர்,

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப." [1434]

என்னுந் தொல்காப்பிய நூற்பாவை,

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டிவிடும்." [28]

என்னுங் குறளிலும்,

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேற்
பொற்புடை நெறிமை இன்மை யான." [981]

என்னுந் தொல்காப்பிய நூற்பாவை,

"கடலன்ன காமம் உழந்தும் மடலேறாப்
பெண்ணிற் பெருந்தக்க தில்." [1137]

என்னுங் குறளிலுந் தழுவியிருத்தலும்,

"மாவும் மாக்களும் ஐயறி வினவே" [1531]
"மக்கள் தாமே ஆறறி வுயிரே" [1532]

---

* சேலம் நகரத் தமிழாசிரியர் கழகம் வெளியிட்டுள்ள திருவள்ளுவர் 2000 ஆண்டுவிழா மலரினின்று எடுத்தது.

www.thamizham.net - Free E book No 7414

என்று, ஆறும் அறிவாகிய பகுத்தறிவு அல்லது பண்பாடு உள்ள வரை மக்கள் என்றும் அஃதில்லாதவரை மாக்கள் என்றும், மாந்தரை இருவகுப்பினராகத் தொல்காப்பியர் வகுத்தவாறே,

"விலங்கொடு மக்க ளனையர் இலங்குநூல்
கற்றாரோ டேனை யவர்." [410]

"அரம்போலுங் கூர்மைய ரேனும் மரம்போல்வர்
மக்கட்பண் பில்லா தவர்." [697]

"மக்களே போல்வர் கயவர் அவரன்ன
ஒப்பாரி யாங்கண்ட தில்." [1071]

என்னுங் குறள்களிற் பண்பட்ட மாந்தரை மக்கள் என்றும்,

"கொலைவினைய ராகிய மாக்கள் மலைவினையர்
புன்மை தெரிவா ரகத்து." [329]

"செவியிற் சுவையுணரா வாயுணர்வின் மாக்கள்
அவியினும் வாழினு மென்." [420]

என்னுங் குறள்களிற் பண்படா மாந்தரை மாக்கள் என்றும், கூறி யிருத்தலுங் காண்க,

2 *"இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்*
இல்லவள் மாணாக் கடை." [53]

என்னுங் குறளிலுள்ள 'ஆனால்' என்னுஞ் சொல்வடிவம் தொல்காப்பி யர் காலநடைக்கு ஏற்காமை. 'ஆயின்' என்பதே அற்றைக்கேற்ற வடிவமாம்.

3 *"ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்*
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கி னாகிய வுயர்சொற் கிளவி
இலக்கண மருங்கிற் சொல்லா றல்ல." (510]

என்னுந் தொல்காப்பிய நெறியிடு, கடைக்கழகச் செய்யுளிற் போன்றே திருக்குறளிலுங் கைக்கொள்ளப் பெறுமை.

எ-டு: *"உள்ளார் கொல்லோ தோழி கணவர்*
... ...
அங்காற் கள்ளியங் காடிறந் தோரே" [குறுந்தொகை, 16],
"சென்றோர் மன்றநங் காதலர் என்றும்" [நற்றிணை, 226],
"மூந்துவந் தனர்நங் காத லோரே" [ஐங்குறுநூறு, 223],

www.thamizham.net - Free E book No 7414

"சொல்வரைத் தங்கினர் காத லோரே" [கலித்தொகை, 2],
"மொழிபெயர் தேஎத்த ராயினும் நல்குவர்
... ...
அலர்நமக் கொழிய அழப்பிரிந் தோரே." [அகம், 211].

இங்ஙனமே,

"நெருநற்றுச் சென்றார்எங் காதலர் யாமும்
எழுநாளேம் மேனி பசந்து." [1278]

என்று குறளிலும் உலகவழக்கிற்குரிய உயர்வுப் பன்மை வந்திருத்தல் காண்க.

4. "எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே." [1008],

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெய ரெல்லை யகத்தவர் வழங்கும்
யாப்பின் வழிய தென்மனார் புலவர்." [1336],

"வேந்துவிடு தொழிலின் படையுங் கண்ணியும்
வாய்ந்தனர் என்ப அவர்பெறும் பொருளே." [1582],

என்று தொல்காப்பியத்திற் குறிக்கப்பட்ட முழுநிறைவான மூவேந்தர் தலைமை,

"பல்குழுவும் பாழ்செய்யும் உட்பகையும் வேந்தலைக்கும்
கொல்குறும்பும் இல்லது நாடு." [735]

என்று குறைவுறக் குறிக்கப்பட்டமை.

5. "தினற்பொருட்டாற் கொல்லா துலகெனின் யாரும்
விலைப்பொருட்டா லூன்றருவா ரில்." [256],

என்னுங் குறள் புத்தமதக் கொள்கையைக் கண்டிப்பதாயிருத்தல்.

புத்தர் காலம் கி. மு. 6-ஆம் நூற்றுண்டு. புத்த மதம் உலகிற் பரப்பப்பட்ட காலம் கி. மு. 273–236. அசோகன் மகன் (அல்லது உடன்பிறந்தான்) நால்வருடன் இலங்கை சென்று அங்குப் புத்த மதத்தைப் பரப்பிய காலம் கி. மு. 247—207. அதன் பின்னரே அம் மதம் தமிழகத்திற் புகுந்திருத்தல் வேண்டும்.

6. 'மலர்மிசை யேகினன்' ('பூமேல் நடந்தான்'), 'பொறிவாயி லைந்தவித்தான்' முதலிய அருகன் பெயர்கள், கடவுட்பெயர்களாகத் திருக்குறள் முதலதிகாரத்தில் ஆளப்பட்டுள்ளமை.

www.thamizham.net - Free E book No 7414

புத்த மதத்தின் பின்னரே ஆருகதம் தமிழகம் வந்ததாகத் தெரிகின்றது.

திருவள்ளுவர் காலம் கடைக்கழக முடிவிற்கு முந்தியதென் பதற்குச் சான்றுகள்:—

1. "பிறர்க்கின்னா முற்பகற் செய்யின் தமக்கின்னா
பிற்பகற் றாமே வரும்." (319)

என்னுங் குறள்,

"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றிய காண்."

என்று கி பி. 2-ஆம் நூற்றாண்டினதான சிலப்பதிகாரத்தில்(21:3-4) கண்ணகி கூற்றாக இளங்கோவடிகளால் அமைக்கப்பட்டிருத்தல்.

2. "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யு மழை." (55)

என்னுந் திருக்குறள்,

"தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் பெருமழை யென்றவப்
பொய்யில் புலவன் பொருளுரை தேறாய்."

என்று பெரும்பாலும் சொன்மாறாதும் திருவள்ளுவரின் சிறப்புப்பெயர் குறிக்கப்பெற்றும், சிலப்பதிகாரக் காலத்ததான மணிமேகலையில் (22:59—62) சதுக்கப்பூதத்தின் கூற்றாகச் சீத்தலைச்சாத்தனாரால் எடுத்தாளப் பெற்றிருத்தல்.

3. "எந்நன்றி கொன்றார்க்கு முய்வுண்டா முய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு." (110)

என்னுந் திருக்குறட்கருத்து ஆலத்தூர்கிழார் பாடிய

"ஆன்முலை யறுத்த அறனி லோர்க்கும்
மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்
குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்
வழுவாய் மருங்கிற் கழுவாயு முளவென
நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்
செய்தி கொன்றோர்க் குய்தி யில்லென
அறம்பா டின்றே யாயிழை கணவ"

என்னும் புறப்பாட்டிலும் (34),

www.thamizham.net - Free E book No 7414

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்
சான்றோ னெனக்கேட்ட தாய்." (69)

என்னுங் குறட்கருத்து, காக்கைபாடினியார் நச்செள்ளையார் பாடிய

"செங்களந் துழவுவோள் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிதுவந் தனளே."

என்னும் புறப்பாட்டிலும் (278), அமைந்திருத்தல்.

"அறம்பாடின்றே" என்று நூலின் சிறப்புப் பெயரைக் குறியாது அதன் பொருள் வகையையே பொதுப்படக் குறித்தமையால், ஆலத்தூர் கிழார் காலத்தில் திருக்குறள் மிகப் பழைமையானதாகவும் அளவை நூலாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

சான்றோன் என்னுஞ் சொல், "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" (புறம். 312) என்பதிற்போல் கல்வியறிவொழுக்கத்தாற் சிறந்தவனை மட்டுமன்றி, "தேர்தர வந்த சான்றோரெல்லாம்", (புறம். 63) என்பதிற்போல் போர் மறவனையுங் குறிப்பது கருதத்தக்கது.

4. கி. மு. 3-ஆம் நூற்றாண்டினதான திருக்கோவை 25 கிளவிக்கொத்துக்களையும் 400 துறைகளையும் கொண்டிருக்க, இன்பத்துப்பால் என்னுந் திருக்குறட்கோவை கிளவிக்கொத்தின்றி 135 துறைகளே கொண்டிருத்தல்.

தொல்காப்பியத்திற் குறிக்கப்பட்டுள்ள துறைகள் ஏறத்தாழ நானூறு. அவற்றுட் சில திருக்கோவையில் இல்லாதன; சில பெயர் குறிக்கப்பெறாதன; சில, நுண்வேறுபாடுகளுடையன. திருக்கோவைக்குப் பிந்தின கோவைகளில் 45 வரை துறைகள் கூடியுள்ளன. திருக்குறள் அறநூலாதல்பற்றி அறமல்லாத துறைகள் விலக்கப்பட்டிருப்பினும், 135 என்பது மிகக் குறைவான தொகையாதலால், அது திருக்கோவைக்குப் பல நூற்றாண்டுகள் முந்தினதாயிருத்தல் வேண்டும்.

5. திருவள்ளுவர் மயிலையில் வாழ்ந்த ஏலேலசிங்கன் என்னும் கடல்வாணிகரிடம் நூல் வாங்கி நெசவுத்தொழில் செய்ததாகச் செவிமரபுக்கதை கூறுதல்,

ஏலேலசிங்கன் காலம் கி. மு. 2-ஆம் நூற்றாண்டு.

www.thamizham.net - Free E book No 7414



தமிழர்க்கு எச்சரிக்கை!

ஐயா,

வட ஆரியர்களும், தென்னாட்டில் ஆரியர்கள் என்று சொல்லிக் கொள்பவர்களும், அவர்கள் இருவரின் அடிமைகளாக வாழ்கின்ற கோடரிக்காம்புத் தமிழர்களும் தமிழ்நாட்டிற்கு, தமிழ்மொழிக்கு, தமிழர்களுக்குத் தொடர்ந்து விளைத்துவரும் தீமைகளினின்றும் நற்றமிழரைக் காக்கத் 'தென்மொழி' ஆற்றலோடு முயல்வது மெச்சத்தகுந்தது. அதே வகையில், தென்மொழியில்

"தமிழருக்கு முன் எச்சரிக்கை"

என்ற தலைப்பில் ஒரு தனிப்பகுதி ஒவ்வொரு திங்கள் இதழிலும் வெளியிட்டால் மிகவும் பயனளிக்கும் என்று கருதுகிறேன்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

6. கிறித்துவிற்குப் பிற்பட்ட சிறப்பு நிகழ்ச்சி எதுவும் திருக்குறளில் குறிப்பாகவேனும் கூறப்படாமை.

கடைக்கழகச் செய்யுட்களிற் கூறப்பட்டுள்ள யவனரைப் பற்றித் திருக்குறளில் ஒரு குறிப்புமின்மை கவனிக்கத்தக்கது.

இச்சான்றுகளால், திருவள்ளுவர் காலம் கி. மு. 2-ஆம் நூற்றாண்டென்று கொள்வது மிகப் பொருத்தமென்றும், எவ்வகையிலும் அது கிறித்துவிற்குப் பிற்பட்டதாகாதென்றும், ஒருகால் புத்தாராய்ச்சியால் இம்முடிபு மாற்றப் பெறினும் திருவள்ளுவர் காலம் இதினும் முற்படுமேயன்றிப் பிற்படாதென்றும், தெற்றெனத் தெரிந்து கொள்க. இன்னும் இதன் தொடர்பான பிற செய்திகளையெல்லாம் என் 'திருக்குறள் தமிழ் மரபுரை'யின் முன்னுரையிற் கண்டு தெளிக.

கடைக்கழக முடிவு கி. பி. 5-ஆம் நூற்றாண்டென்பது; காலஞ்சென்ற வரலாற்றுப் பேராசிரியர் (V. R.) இராமச்சந்திர தீட்சிதரின் முடிபாம்.

தொல்காப்பியர் காலம் கி. மு. 7-ஆம் நூற்றாண்டென்பது, என் தொல்காப்பிய விளக்கத்தில் தக்க சான்றுகளால் நிறுவப் பெறும்.

www.thamizham.net - Free E book No 7414

இந்த 'எச்சரிக்கை'யில், அந்தந்தத் திங்களில், பல குழுக்கள் தமிழருக்குக் கொடுமை செய்யும் "சரச,சாம, தான, பேத, தண்ட," உரைகளையும், செயல்களையும், நிகழ்ச்சிகளையும் குறிப்பிட்டுக் கூடுமானவரையில் அத் தீமைகளைத் தவிர்க்கும் வழிகளையும், சுருக்கமாகச் சொன்னால் உதவும்.

அத்தகைய குழுக்கள், எடுத்துக்காட்டாக:—

1. இந்தியப் பேராயக் கட்சி (The Indian National Congress)
2. "பாரத சேவக் சமாச்" (Bharat Sevak Samaj)
3. "பாரதீய வித்தியா பவன்" (Bharatiya Vidhya Bhavan)
4. 'பாரதீய கியானபத்" (Bharatiya gyanapath)
5. "சாகித்ய அகெடமி" (Sahitya Academy)
6. "ரவீந்திர சபை' (Rabindra Award)
7. இராமகிருட்டிண- விவேகானந்த மிசன்கள் (Ramakrishna Vivekananda Missions)
8. "இந்திப் பிரசார சபைகள்" (Hindi Prachar Sabhas)
9. 'கலாட்சேத்திரம்" அடையாறு (Kalakshetra, Adayar, Madras)
10. "பார்ப்பன" கதாகாலட்சேபங்கள்-
11. மயிலாப்பூர், "ரசிகரஞ்சனி" முதலிய இசை நிலையங்கள்.
12. "இந்துமத புராண" ஒலிச் சித்திரங்கள் (Cinema Shows)
13. சென்னைப் பல்கலைக்கழகச் சொற்பொழிவுகள் (Madras University Lectures)
14. பள்ளிப்பாடப் புத்தகத் தணிக்கைக்குழு (Text Book Committee)
15. "இந்துமத" மடங்கள், கோவில்களின் பொருள் நிலையங்கள் (Hindu Religious Endowments)
16. அமெரிக்கர் பண உதவியால் நடக்கும் செயல்கள் (Ford Foundation, C B I (America) Funds, American Peace Corps)
17. 'இந்து', "இந்தியன் எஃசுபிரசு" முதலிய நாட்செய்தித் தாள்கள், மற்ற தமிழருக்கு எதிரான வெளியீடுகள்;

www.thamizham.net - Free E book No 7414

(முதன்மையாக ஞாயிறு சேர்க்கைகள், (Sunday Magazines)

—த. உலகநாதன், அறி. இ. ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர்,
இரா.ச. புரம், கோவை.

இந்தியை ஒருபோதும் ஏற்போம்.

அன்புடையீர்!

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த உலக மீட்பர் (இரட்சகர்) கோவில் கிளை இளங்கிறித்தவத் தொழிலாளர்கள் 26–2–69 5–3–69 ஆகிய இரு நாட்களிலும் 'இந்தி மொழிச் சிக்கல்' என்னும் தலைப்பில் நடத்திய ஆய்வுக் கூட்டங்களில் எடுத்த முடிவுகள் வருமாறு:

1. இந்தித் திணிப்பை உணர்ந்த போதுதான் மக்கள் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர். இந்தியை எதிர்த்து 1938-இல் ஈ. வெ. இராமசாமிப் பெரியார் தலைமையில் தமிழ்நாட்டில் இந்திப் போராட்டம் நடந்துள்ளது. ஆனால் தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே (கி. மு. 500) ஆரிய திராவிட இனப் போராட்டமும் வடமொழித் தென்மொழிப் போராட்டமும் நடந்து வந்துள்ளன.

2. இந்தி ஆட்சி மொழியாவதால் தமிழர்க்கு எள்ளத்துணை நன்மையும் ஏற்படாது. பெரும்பான்மையோர் பேசுமொழி என்று அதை ஆட்சி மொழியாக்குவதால், சிறுபான்மையோர் நசுக்கப் படுவதும் அவர்தம் மொழியுரிமை மாய்க்கப்படுவதும் இந்தியக் கூட்டரசிற்குப் புறம்பான நடவடிக்கைகளாகும். தமிழன் குடுமி இந்தியாரின் கைகளில் சிக்குண்டு போவதைத் தமிழர் எவரும் விரும்பார்.

3. தமிழ்நாடு ஒருபோதும் பிறன் ஒருவன் ஆட்சிக்குட் பட்டதன்று என்னும் பெருமையுடையது. ஆங்கிலராட்சியில் தான் தமிழ்நாடு அவர்க்குட்பட்டது. அப்போதும் தமிழனே தமிழனை ஆள்வதற்கும் வாய்ப்பிருந்தது. மேலும் ஆங்கிலேயர் தமிழைக் கெடுக்கவும் அழிக்கவும் முற்பட்டிலர்.

www.thamizham.net - Free E book No 7414

4. இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டோரை இந்தியில் நடுவண் பொது வேலையமர்த்தக் குழுத் தேர்வெழுத (Union Public Service Commission Examination)விட்டுப் பிற மொழியாளரையும் அதே மொழியில் தேர்வெழுத வற்புறுத்துவது பெரும் உரிமைப்பறிப்புச் செயலாகும்.

5 இந்திய மொழியொன்று இந்தியாவிற்குத் தேசியமொழியாக இருக்கவேண்டுமென்று கரணியம் காட்டுவதும், அம்மொழி இந்தியாவில் மாநிலங்களுக்குள் ஒற்றுமையை வளர்க்கும் என்பதும் பொருந்தாக் கூற்றுகளாகும். மங்கல அணியை விற்று மண விழா விருந்து நடத்துவது போன்ற செயல் அது. இந்தி இந்தியக் கூட்டுறவை வளர்க்கும் என்றால் இந்தியக் கூட்டுறவையும் அனைத்துலகக் கூட்டுறவையும் ஒருங்கே வளர்க்கும் ஆங்கிலத்தை நம் நாட்டு மொழியாகப் பெறுவதற்கு நாம் பெரிதும் மகிழ்ச்சியடைய வேண்டும்.

தீர்மானம்

இந்தி எந்தக் காலத்திலும் எவ்வளவிலும் எந்நிலையிலும் ஆட்சிமொழியாவதை நாங்கள் வன்மையாக எதிர்க்கிறோம்.

1. சோ சோசப் குழந்தைராசு, தலைவர். (Young Christian Workers Holy Redeemer's Church, Trichy-8.)

2. அ. அ. அரசு, தலைவர், இளங்கிறித்தவத் தொழிலாளர் - மறை மாவட்டத் தலைமையகம், திருச்சி-1.

அமைச்சர்கள்-செயலாளர்கள் போராட்டம்!

அன்புடையீர்!

"எங்களுக்கும் தலைமைச் செயலர்களுக்கும் இப்பொழுது பெரும் போராட்டம் தொடங்கி இருக்கிறது. அவர்கள் இழுத்த பாதைக்கு நாங்கள் செல்லுவதா? அல்லது, நாங்கள் இழுக்கும் பாதைக்கு அவர்கள் வருவதா? அவர்களுக்கு உள்ள ஆங்கில அறிவு வன்மையானதா? அல்லது, எங்களுக்கு இருக்கும் ஆங்கிலப்புலமை திண்மை வாய்ந்ததா? அவர்கள் வல்லவரா? அல்லது, நாங்கள் வல்லவரா என்ற போராட்டம் நடந்து வருகிறது.

கடந்த இரண்டாண்டுகளில் நாங்கள் எந்தெந்த வழிகளில் தமிழால் செயல்படுத்த முடியுமோ அந்தந்த வழிகளிலெல்லாம் முடிந்த

www.thamizham.net - Free E book No 7414

அளவு செயல்பட்டு வருகிறோம். ஆனால், அந்த முயற்சி வேகமாகவும்-விரைவாகவும்-சுறுசுறுப்பாகவும் செயல்பட முடியவில்லை. அதற்குக் காரணியம், நம் தலைமைச் செயலர்களும்-பிறரும்பே! நாங்கள் தமிழில் எழுதி அனுப்புங்கள் என்றால் அவர்கள் ஆங்கிலத்திலேயே எழுதி விடுகிறார்கள். எனது இரண்டாண்டுக் காலத்தில் அவர்கள் எனக்கு ஆங்கிலப் பாடம் கற்றுத் தந்தார்களேயொழிய தமிழ்ப்பாடம் கற்றுக் கொண்டார்களல்லர்!

இன்று முதலமைச்சர் அவர்கள் தமக்கு வந்தகோப்புகளை (Files) யெல்லாம் திருப்பி அனுப்பித் தமிழில் எழுதி விடுக்கக் கட்டளையிட்டிருக்கின்றார். இது பலரிடையேயும்-பல துறைகளிலேயும் சல்சலப்பை உண்டுபண்ணியிருக்கிறது. தமிழால் முடியாதது ஒன்றுமில்லை! முடியும். உலகிலுள்ள பல மொழிகளிலேயும் ஒப்பற்ற உயர்ந்த மொழியாகத் தமிழை நாம் கொண்டிருக்கின்றோம். ஒரு சொல்லுக்குப் பல பொருள்களையும், ஒரு பொருளுக்கு எண்ணற்ற சொற்களையும் தன்னகத்தே கொண்டிருப்பது தமிழ் ஒன்றுதான். அத்துணை வளமான தமிழால் முடியாதென்பதை எவரும் ஒப்பார்.

நீங்கள் எல்லாரும் தமிழில் புலமை பெற்றுத்தான் எழுத வேண்டுமென்றோ, தனித்தமிழிலேதான் எழுத வேண்டுமென்றோ நாங்கள் கூறவில்லை. தமிழால் எழுதுங்கள். அஃது எப்படி அமைந்தாலும் திருத்திக்கொள்ளலாம்.

ஆங்கிலம் போலத் தமிழ் அவ்வளவு எளிதாய் வருவதில்லையே என்று சிலர் கூறுகின்றார்கள். நான் கேட்கிறேன் அப்படி எத்தனைப் பெயர்கள் ஆங்கிலப் புலமை நிறைந்தவர்களாய் இருக்கின்றார்கள்? ஆங்கிலம் அரைகுறையாகக் கற்றவர்கள் அலுவல் தொடர்புகளை ஆங்கிலத்தில் மேற்கொள்ள முடியாது தவிப்பதையும், பழைய கோப்புகளைப் பார்த்துப் படியெடுப்பதையும் நாம் காண்கின்றோம் அல்லமோ? இந்த நிலைக்குக் காரணியம் அலுவலகங்களில் தாய்மொழி இடம்பெறுமையன்றோ? இதனை நினைத்துவிட்டால் தாய்மொழிப்பற்று வராதா? தமிழில் எழுதத்துடிக்காதா? பிறமொழிச் சொற்களைத் தமிழ்ப்படுத்த விருப்பம் எழாதா?

தமிழ்ப் படுத்தும்போது ஆங்கிலத்தின் சொல்லுக்குச்சொல் மொழி பெயர்க்க வேண்டுமே; அப்படியானால் எந்தச் சொல்லை எங்குப் போடுவது? பிழைநேர்ந்து விட்டால் என்ன செய்வது என்றெல்

www.thamizham.net - Free E book No 7414

லாம் குழம்பாது, முதலில் ஆங்கிலக் கருத்தை உணர்ந்து கொள்ளுங்கள். பின் அதை அப்படியே தமிழில் எண்ணுங்கள். எண்ணிய அக் குவியலை அப்படியே தமிழில் படையுங்கள். சமையல் கற்றுக் கொள்பவள் தொடக்கத்திலேயே சுவையாகப் படைத்துவிட முடியாது. மெல்ல மெல்லத்தான் அத்திறமை வளரும். தமிழும் அப்படித்தான். வருங்காலத் தமிழர் அதை வரையறுத்து–வகைப்படுத்தி–வளர்த்துக் கொள்வார்கள்.

இன்று அலுவலகங்கள் தமிழில் செயல்படுதற்கு விழா எடுக்கின்றோம். இதை மேனாட்டார் ஒருவர் கண்டால் ஒப்புக்காவது நம்மிடையே கலந்து சிரித்துவிட்டுப் பின்னால் சென்று, இவ்வளவு பிற்பட்ட இனமா? நாடா? மக்களா இவர்கள்? இத்துணை தாய்மொழிப் பற்றற்றவர்களா? என்று எள்ளி நகையாடி இழித்துப் பழித்துத் தூற்றுவார். அதனால் முதலில் நமக்கு மானந்தான் பெரிது! பிறகுதான் மற்றவையெல்லாம்.

ஆகையால் தமிழால் முடியாது என்று சொல்லி இனிப் பயனில்லை. முடியும் என்று முயலல் வேண்டும். உள்ளத்திலிருந்து தமிழ் ஆர்வம் முகிழ்த்தெழ வேண்டும். அஃது உடலோடு–உயிரோடு–உணர்வோடு–குருதியோடு கலக்க வேண்டும். அப்படிப்பட்ட தமிழார்வம் வரப்பெற்றால் தமிழ் தானாகவே வரும். தானாகவே எண்ணலாம்; எழுதலாம்; அறிவுபெறலாம்–ஆற்றல் கொள்ளலாம். அதற்கு முயற்சியில் இன்றிருந்தே ஈடுபடுங்கள். வெற்றி கிட்டும். வாழ்க தமிழ்! வளர்க உங்களது பணி!''

இவ்வாறு 24—2—69-ஆம் பக்கல் மாலை கைந்நூல் (கதர்) அலுவலகத்தின் ''ஆட்சிமொழிச் செயல்'' என்னும் விழாவில் அத்துறை அமைச்சர் சொற்பொழிவாற்றினார்.

அன்பன், தி. கு. அன்பரசன்,
உலகத் தமிழ்க் கழகச் சென்னை மாவட்ட அமைப்பாளர்.

அந்நாள்—......தொலைவில்லை!

''வீழ்ந்திட்ட குமுகாயத்தை வாழ்விக்க வந்த ஒளிவிளக்கேவாழி! தாழ்ந்திட்ட தமிழர்தம் நெஞ்சில் சூழ்ந்திட்ட அறியாமையை அகற்றத் 'தென்மொழி' ஆற்றும் அரும்பணியை அளவிட்டுக் கூறல் இயலாது!... கள்ளமும் கரிசுமற்ற நல்லோர்கள் வாழ்ந்திடும் நன்னாள் வாராதா?—என்று ஏங்கிக்கிடக்கும் என்போன்ற இளைய நெஞ்சங்

களைத் 'தென்மொழி'யின் கருத்தொன்றே தாங்கிப்பிடிக்கிறது, வஞ்ச கர்தம் பொய்யுரையும், போலிப்புனைவும் போற்றப்படுதல் கண்டு எனதுள்ளம் சோர்வடையும் நேரமெல்லாம் 'தென்மொழி'யின் மெய்யுரைதான் நெஞ்சகத்தே உறுதியை ஏற்றுகிறது—அச்சத்தைக் களைகிறது; தாங்கள் காணவெண்ணும் சுரண்டலற்ற—தன்னலமற்ற—ஒருவன் வாழ ஆயிரம்பேர் வாடும் நிலையற்ற, வேற்றுமையற்ற புகழ்மிகு குமுகாயத்தைச் சமைக்க, என்னாலான பணியை ஆற்ற எனதுள்ளம் முந்தித் துடிக்கிறது!—தாங்கள் கை நீட்டும் திசையில் செயலாற்றத் துடிக்கும் என்போன்ற கொள்கை நெஞ்சங்கள் உள்ளவரையில்... தாங்கள் உள்ளம் சோர்தல்வேண்டா! தாங்கள் ஆற்றுகின்ற உண்மைப்பணி வீண்போகவில்லை...அஃது ஆயிரமாயிரம் எழுச்சி மறவர்களை உண்டாக்குகிறது—இலைமறை காயாக இருக்கும் அக்கூட்டத்தின் வலிமை வேளை வரும்போதே தெரியும்.—எதிர்காலத் தமிழகம் தங்கள் பணியை நெஞ்சாரப் போற்றி நிலையான பெரும்புகழை அளிக்கும் என்பதில் சிறிதளவும் ஐயமில்லை! 'தென்மொழி'யின் தொண்டு வளரட்டும்! அஃது உறங்குகின்ற தமிழர்தம் உணர்வுகளைக் கிளறட்டும்! அவ்வுணர்வு கிளர்ந்தெழும் நாளும் வெகு தொலைவில் இல்லை!—தமிழகம் தன்னுரிமை பெற்று உலகரங்கில் தலைநிமிர்ந்து வாழும் காலமும் தொலைவில் இல்லை! அந் நன்னாளைக்காண, தங்கள் வாழ்நாளை நீண்டதாக்க இறைவனை இறைஞ்சுகின்றேன்.

—இ.செ. தீன், சென்னை-1.

திருவள்ளுவர் 2000 ஆண்டு மலர்

(சேலம் நகரத் தமிழாசிரியர் கழகம் வெளியிட்டது)

திருவள்ளுவரின் அழகிய மூவண்ண முகப்புடனும், மொழிப் பேரறிஞர் திரு. ஞா. தேவநேயப் பாவாணர். திரு. வை. சொக்கப்பனார், திரு. குன்றக்குடி அடிகளார், அறிவியலறிஞர் திரு. கோ. துரைசாமி, பெருஞ்சித்திரனார் போன்ற அறிஞர் பெருமக்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளுடனும், ஏறத்தாழ இருநூறு பக்கங்கள் கொண்டது.

குறைந்த படிகளே கையயம் உள்ளன. உடனே வாங்கிப் படித்துப் பயன்பெறுக.

விலை உருபா-3- அஞ்சற்செலவு தனி.

கிடைக்குமிடம்:—

புலவர். மி. மு. சின்னாண்டார்,
50, நத்தமர் தெரு, சேலம்-3,

நூறாசிரியம்

துரை-மாணிக்கம்

பாட்டு-௧௮.

நகையும் வாரா தழுகையும் விளையாது
பகையும் கொள்ளா துறவும் பாராது
திகைப்பல் யானே முகில்திரி விசும்பிற்
கயிறுடு தொம்பர் கைக்கழி யன்ன
உயிராடு காதற் கூன்று கோலனைத்
துறக்கக் கூறினள் அன்னை;
இறக்கக் கூறின ளென்றறி யாமே!

பொழிப்பு:

நகைப்பும் தோன்றுது; அழுகையும் விளையாது. நெஞ்சம் பகையும் கொள்ளாது; உறவையும் எண்ணுது, திகைப்புறுவேன் யான்! முகில் திரிகின்ற விசும்பின்கண் கயிற்றின்மேல் நின்று ஆடும் தொம்பரின் கையகத்துள்ள கழியைப்போல், உடல்மேல் நின்று ஆடிக்கொண்டிருக்கும் இவ்வுயிருக்குப் பற்றுக்கோடாய் விளங்கும் கோல் போன்றவனைக் கைநெகிழ்த்துவிடு எனக் கூறினுள் என் அன்னை; அதுவழி என்னை இறந்துவிடு எனக் கூறினும் என அறியாளாக.

விரிப்பு:—இப்பாடல் அகத்துறையைச் சார்ந்தது.

'ஊசலாடும் என் உயிர்க்குப் பற்றுக்கோடாய் நிற்கும் என் காதற்குரியவனைத் துறந்துவிடக் கூறிய அன்னை, அதுவழி என்னை இறந்துவிடக் கூறுவதறியாமல் கூறினுளாக, அவள் அறியாமை கருதி நகைக்கவும் தோன்றுது; உண்மையாகவே என்னை இறக்கக் கூறுமையால் அழுகையும் விளையாது; அவள் அன்பு கருதி என் நெஞ்சம் பகைமையும் கொள்ளாது; அவளென் அன்னை என்ற உறவையும் எண்ணிப் பாராது. எனவே திகைப்புறுவேன் யான்! எனத் தலைவி தன் தோழியிடத்துக்கூறி யழுங்கியதாகும் இப்பாட்டு.

நகையும் வாராது: பற்றுக்கோடாய தொன்றைப் பற்றறுக்க என அறியாமையால் கூறியது நகை விளைப்பதென்னினும், தன்மேல்

www.thamizham.net - Free E book No 7414

வைத்த அன்பின் முதிர்வால் அன்னை அவ்வாறு கூறினளாகலின் அது நகையை விளைவிக்கவில்லை—என்றவாறு. இனி, தன் கேள்வனைத் துறக்கக் கூறிய கூற்று, தான் இறக்கக் கூறியதே என்று அறியாமற் போனது நகைப்புக்குரிய தெனினும், தன் அவலங் கருதுமிடத்து நகையும் வருவியாத ஒன்று என்றுங் கொள்க.

அழுகையும் விளையாது: தான் இறத்தற் கேதுவாகிய தன்மையின் தலைவனைத் துறக்க எனக் கூறியது அழுகையை வருவிப்பதென்னினும், அஃது அறியாமையாற் கூறியதாகலின், துன்பத்தையும் விளைவியாது என்றாள் என்க.

பகையுங் கொள்ளாது: பகையைப் போலும் தான் இறந்துபடுவதாகியதோர் உத்தியைக் கூறினளேனும், அது தன் நலங் கருதிக் கூறிய கூற்றே ஆகலான் பகை கொள்ளுதற் கிடந்தரவில்லை—என்றாள்.

உறவும் பாராது: இனி, தன் நலங்கருதி அன்பால் கூறிய கூற்றாகி உறவுமுறைக்கு உறுதி பயப்பதேனும், தன் உயிர் கெடுமாறு கூறியதாகலின் உறவு நோக்கியும் அது கொள்ளப்படுவதன்று என்றாள் என்க.

திகைப்பல் யானே: இவ்வாறு ஒருபுறம் நகைப்பிற்கும் மறுபுறம் அழுகைக்கும், ஒருபுடை பகைக்கும் மறுபுடை உறவுக்கும் உரியதாகிய அன்னையினது கூற்றின் மெய்ப்பொருள் தேராது திகைக்கின்றேன் யான் என்றவாறு.

திகைதல்—திசைதல்—மயங்குதல் — வேறுபாடு உணராது தடுமாறல்.

முகில்திரி விசும்பிற் கயிறுடுதொம்பர் கைக்கழி யன்ன: முகில் திரிகின்ற வானத்திடைக் கயிற்றின் ஆடும் தொம்பர் தம்மை நிலை நிறுத்த வைத்துக்கொள்ளும் கைக்கோல்போல்—எடுத்துக்காட்டு உவமை.

கயிற்றில் ஆடும் தொம்பர் கைக்கழியைத் துறக்குமிடத்து; அஃது உயிர்க்கூறு விளைவித்தல்போல், உயிர்க்குப் பற்றுக்கோலாய் விளங்கும் தன் தலைவனைத் துறப்பதும் தன் உயிர்க்கு ஊறு விளைவிக்கு மாகலின், அஃது தன்னை இறப்பக் கூறியதே ஆகும் என வேண்டி, உயிராடு காதற்கு ஊன்று கோலன் என்றாள்.

www.thamizham.net - Free E book No 7414

விசும்பிற் கயிற்றின்மேல் ஆடும் தொம்பருக்கு, மெல்லியதாய் நிலத்தின்மேற் பாவாது உறுவாரிடைத் தொடர்பற்றுத் தனிமையில் விளங்குகின்ற உடல் என்னும் கயிற்றின்மேல் நின்றாடும் உயிரை யும், தொம்பர் பற்றும் கைக்கழிக்குத் தன் உயிர் பற்றிக் கொள்ளும் தலைவனையும் உவமை கூறினாள் என்க.

இனி, தன் தலைவனைத் துறந்துவிடக் கூறுவது, கயிற்றின் மேல் நின்றாடும் தொம்பனை நோக்கி அவன் பற்றியுள்ள கைக்கழி யினைத் துறந்துவிடு என்று கூறுவதற்கொப்பாகும் என்றாள் என்க. அஃது அவன் இறந்துவிடற்கு ஏதுவாவது போலவே, தன் காதல னைத் துறப்பதும் தன் இறப்பிற்கு ஏதுவாகும் என்றும் உணர்த்தி னாள் என்க.

உடலைக் கொடிக்கு உவமையாகக் கொள்வதற்கொப்ப, ஈண்டுக் கயிற்றுக்கு உவமைகூறப் பெற்றது. தன் விருப்பிற்கேற்பப் பின்னிக் கொள்ளும் கொடிபோலன்றித் தன்னுடல், இழுத்துக் கட்டப்பெற்ற கயிறுபோல் கட்டுப்பட்டுக் கிடப்பதும், அதுபோல் கட்டுப்பெறாத தன் உயிர் தன் தலைவனைப் பற்றுக்கோடாகக் கொண்டு காதல் ஆட்டு நிகழ்த்துவதும் உவமையால் உணர்த்தப்பெற்றன என்க.

ஊன்று கோலன்: ஊன்று கோலாகி நிற்கும் காதலன், உயிர்க்கு ஊன்றுகோல் போன்றவன்.

தொம்பர்: தொம்பக்கூத்து ஆடுவார்.

தொம்பம்: கழைக்கூத்து வகையினொன்று. கழைக்கூத்து கம் பக்கூத்து என்றும் வழங்கும். மேனாட்டினர் இக்கால் ஆடும் BAR ஆட்டமும் கழையாட்ட வகையினொன்றே. கழையைக் கிடையாகவும் நட்டும் வைத்து அதன்மேல் நின்றாடும் ஆட்டம். கழைக்கு மாறாகக் கயிறும் கட்டப்பெற்று ஆடுதலும் உண்டு.

இது குறிஞ்சி யென் திணையும், தோழிக்குத் தலைவி அறத்தொடு நிற்றல் என் துறையுமாம். 0

தென்மொழி அமைக்கவிருக்கும் விடுதலைப் படையின்
தொடக்கக்கூட்டம் விரைவில் நடக்கும்!
தமிழ் மறவர்கள் அணியமாகுக!

www.thamizham.net - Free E book No 7414

தமிழ் எழுத்துச் சீர்திருத்தம்:
ஆய்வுக் கட்டுரை:

தமிழின் பழைய வரிவடிவும் அதன் புதிய ஒலிவடிவும்

"THE OLD TAMIL SCRIPTS AND ITS REFORMED NEW SOUNDS"

பேராசிரியர். மு. உலகநாதன்.

"தமிழ் எழுத்துகளில் சீர்திருத்தம்" தேவை என்னும் ஒரு கருத்து கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகத் தமிழ் அறிஞர் உலகில் பெரும் தருக்கத்திற்குரியதாக இருந்து வருகிறது. அதன் பயனாகத் தமிழ் அறிஞர்கள் பலர் தத்தமது ஆராய்ச்சிக்குத் தோன்றியவாறெல்லாம் சிலபல கருத்துகளைக் கட்டுரை வடிவிலும் நூல் வடிவிலும் செய்தித்தாள்களின் மூலமாகவும் செய்து காட்டியிருக்கின்றனர். அக்கருத்துகள் எல்லாம் முற்றமுடிந்த ஒரு கருத்தாக எல்லாராலும் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக அமையாத காரணத்தினால் சில கருத்துகள் ஏற்றுக்கொள்ளப்பட்டும்சில கருத்துகள் ஐயத்திற்குரியனவாகவும் சில கருத்துகள் மறுக்கப்பட வேண்டியனவாகவும் அமைந்துள்ளன. எப்படியிருப்பினும் அக்கருத்துகள் தமிழ் எழுத்துச் சீர்திருத்தத்தை வரவேற்பதோடு எதிர்கால அறிஞர்களுக்கு ஆய்வு விருந்தாகவும் அமைந்துள்ளன என்பதை மறுப்பதற்கில்லை.

இவ்வகையில் நூல்வடிவில் இரண்டு நூல்களும், கட்டுரை வடிவில் சில கட்டுரைகளும் படிக்க நேரிட்டது. எந்த நூலும் எந்தக் கட்டுரையும் தெளிந்த ஒரு கருத்தினை விளக்கிச் செல்லவில்லை. சிலவே ஏற்றுக்கொள்ளத்தக்கனவாயும் பல தள்ளத்தக்கனவாயும் அமைந்து இருந்தமை கண்டேன். எனவே அக்குறைகள் எல்லாம் விலக்கப்பட்டு முடிந்த ஒரு கருத்தினை, தமிழின் மரபு பிறழாது கூறவேண்டும் என்ற அவா என் மனத்துத் தோன்றியது. அதன் விளைவே இங்குக் கட்டுரை வடிவம் பெறுகிறது.

நூலும் கருத்தும்: முதலில் காணநேர்ந்த நூல்களையும் கட்டுரைகளையும் சிறிது விளக்கிப்பின் புதுவன கூறுவேன்.

1. தமிழெழுத்துச் சீர்திருத்தம் (ஆசிரியர்-புலவர்.குழந்தை)
2. "Reform in Tamil Alphabets" (Kuttaalam)

www.thamizham.net - Free E book No 7414

3. "The Tamil Script Reform" (T P. Meenakshi-sundaram) Tamil Culture Vol II No. I. 1952.

4. The Existing Tamil Scripts and its Need For Elaboration. (N. Gnanasambandan B. E.)

மேலே கண்ட நூல்களும்கட்டுரைகளுமே இங்கு நான் எடுத்துக் கொண்டவை.

புலவர் குழந்தை: முதலில் தமிழெழுத்துச் சீர்திருத்தம் என்னும் நூலில் ஆசிரியர் புலவர் குழந்தை அவர்கள் தம் ஆராய்ச்சி முழுமையும் பயன்படுத்தித் தமிழுக்கு ஒரு புது வரிவடிவையே தருகிறார்.

இதனால் தமிழ் உயிர் எழுத்துகள் பத்தாக்கப்படுகின்றன.

அந்தப் பத்தில் அ, ஆ ஆகிய இரண்டு எழுத்துகளும் சிறிது மாற்றத்தோடு அவரால் எடுத்துக்கொள்ளப்படுகின்றன. 'ஆ' என்னும் எழுத்தை 'அா' என்று காட்டுகிறார். வரிவடிவம் சிறிதே மாறியுள்ளது. மீதமுள்ள இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ என்னும் எட்டெழுத்துகளும் முற்றிலும் புது உருவம் பெறுகின்றன. பழைய வரிவடிவம் அவற்றில் ஒருசிறிதும் இல்லை. இதனால் பதினெட்டு மெய்களின் மேலும் ஏறுகின்ற உயிர் (அ அா தவிர) 18×8 என்னும் முறையில் 144 புதிய உயிர்மெய் வரிவடிவங்களைப் பெறுகிறது.

பெறுகின்ற புதிய உயிர்மெய் வடிவங்கள் இன்றைய உயிர் மெய்யெழுத்துகளைப் போலத் "தட்டெழுத்துக் கருவிக்கோ" "அச்சு முறைக்கோ" "வார்ப்பச்சுக்கோ" (Linotype) பொருந்தி வராத முறையில் இல்லாமல் காலத்தையும் இடத்தையும் குறைக்கின்ற முறையிலேயே அமைக்கப்பட்டிருக்கின்றன.

எடுத்துக் காட்டாக,

∴ அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஒ, ஓ, அய், அவ்

∴ அ, அா,), C, உ, ௳, 6, ே, ெ, ௭, அய், அவ்

இப்படி உயிரின் வரிவடிவங்கள் மாற்றப்பட்டுள்ளன.

இவ் வரிவடிவங்களை இன்னுமொருமுறை கூர்ந்து நோக்குங்கள். அ, அா, அய், அவ் ஆகிய நான்கு எழுத்துகளைத்தவிர மற்றவை யாவுமே எழுத்துகள்போல் காட்சி நல்கவில்லை. மாறாக அவையனைத்தும் பழைய குறியீடுகள் போலவே (ெ, ே, ை, ா,) காட்சி

www.thamizham.net - Free E book No 7414

யளிக்கின்றன. இவ்வுயிர் எழுத்துகளை மெய்யொடு புணர்த்து உயிர் மெய்யாக்கும்போது க, கா, க). கC, கఒ, க൳, க6, கே, கெ, க ஒ, கய், கவ், க். எனப் பக்கத்தில் இட்டுக் கொள்வோமானால் க, கா. கி, கீ, கு, கூ என உயிர்மெய்களாகி விடுகின்றன.

உண்மையில் சிறந்த முறைதான் என்ற போதிலும் தோன்று கின்ற உயிர்மெய் வடிவங்கள் அனைத்துமே நம் உணர்வை இன்றைய தமிழ் எழுத்துகளிலிருந்து வேறுபிரித்து விடுகின்றன.

அனைத்து உயிர் மெய்யெழுத்துகளுமே புதுமையாக ஆக்கப்பட வேண்டிய ஒன்றுதானு என்ற எண்ணத்திற்கு இடம் ஏற்படுகிறது. அதனால் இக்கண்டுபிடிப்பு எழுத்துகளே இல்லாது, பேச்சுவழக்கில் மட்டும் கருத்துகளைக் கூறிக்கொண்டிருக்கிற ஒரு மக்கட் கூட்டத் தாருக்கே மிகவும் பயன்படும். அவர்களுக்கு இது மிகச்சிறந்த எழுத்துகளை உடைய மொழியாகவும் அமையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை

வாழ்க புலவர் குழந்தையின் புலமை! விரிவை அவர்தம் நூலுள் கண்டு கொள்க.

திரு. குற்றாலம்;- த டுத்து 'Reform in Tamil Alphabets" என்னும் ஒருசிறு ஆங்கில நூல். இதனைக் காலஞ்சென்ற கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை அவர்களின் பெயரரான திருக்குற்றாலம் என்பவர் வெளியிட்டுள்ளார்.

ஆங்கில எழுத்துகள் இருபத்தாறு. அவை உயிர் 5, மெய் 21. உயிரும் மெய்யும் கூடிப்பிறக்கின்ற உயிர்மெய்கள் அவற்றில் தனித்த எழுத்துகளாக இல்லை.

தமிழில் க்-இ—கி, க்-உ—கு
என்று கூடுகின்றபோது உயிர்மெய்யென்று 216 புது வடிவங்கள் தோன்றுகின்றன.

ஆங்கிலத்தில் K-A—KA
W-E—WE

என்று உயிரும் மெய்யும் கூடியபோதும் அதே வரிவடிவை யுடைய இரண்டு எழுத்துகள்தான் வந்து நிற்கின்றன. இதனால் ஆங்கிலம் 26 எழுத்துகளுடனேயே நின்று தன்னை வளர்த்துக் கொள்ள முடிகிறது. ஆனால் தமிழ் 216 வரிவடிவங்களைப்பெற்று இவ்வளவு எழுத்துகளா என்ற மலைப்பைத் தந்து நிற்கிறது. இக் குறை நீங்க ஆங்கிலத்தைப் போலவே தமிழின் உயிர் 12, மெய் 18 ஆகிய எழுத்துகளை எழுதலாம் என்று எடுத்துக்காட்டித் தம் கருத்

www.thamizham.net - Free E book No 7414

தைத் தமிழ்கூறும் நல்லுலகின் முன் வைக்கிறார். அதற்குமுன் உயிர் மெய்யெழுத்துகளாகிய க, ச, ட, த, ப, ற என்ற எழுத்துகளை, புள்ளியின்றி இருப்பினும் 'இக்', 'இச்' 'இட்', 'இத்', இப்',' இற், என்பது போன்றே பலுக்க வேண்டும்.

"புள்ளியில்லா எல்லா மெய்யும்" என்ற தொல்காப்பியர் நூற் பாவின்படி 'மெய்யும்' என்றதனால் உயிர்மெய்யின் ஓசையை மெய் யோசையாகவே பலுக்குதல் வேண்டும். (* தொல்-சூ. 17). இத னால் எழுத்துகளுக்கு மேற்புள்ளி யிருக்கவேண்டும் என்ற தேவை இல்லாமற் போய்விடுகிறது. எனவே புள்ளிபெற்ற மெய்யெழுத்து கள் என்ற வரிவடிவம் தேவையில்லாத ஒன்று. இதனால் 'க' என் பதை 'க்' (இக்) என்று மெய்யோசை இட்டே புதுமுறையில் பழகிக் கொண்ட பின்பு ஆசிரியரின் கருத்துக்கு வாருங்கள்.

க் + அ—க்அ; கஅ (க)
க் + —க்இ, கஇ; (கி)
க் + ஆ—க் அஅ, க்அ அ;(கா)
க் + ஈ—க்இஇ; கஇஇ (கீ)

இம்முறை ஆங்கிலத்தில் K+A=KA
P+A=PA

என்பனபோன்றே இருக்கிறதல்லவா? எனவே 216 உயிர்மெய் வடிவங்கள் தேவையற்று முப்பது எழுத்துகளுக்குள்ளாகவே முடிந்து விடுகின்றன என்று தமது ஆராய்ச்சியை உலவவிடுகிறார். இதன் நடைமுறை வழக்கினையும் அவரே ஒரு குறளின் மூலம் எழுதியும் காட்டுகிறார். சற்றுக்கவனமாக அதனைக்கவனிக்கவேண்டுகின்றேன்.

"சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ்சொல் இன்மை அறிந்து"

"சஒலலஉகஅ சஒலலஅஇப பஇறஇதஒஓரசஒல அசசஒலலஅஇ
வஎலலஉஞசஒல இன்மஅஇ அறஇந்தஉ"

என்று எழுதிக் காட்டியுள்ளார். அச்செழுத்து, தட்டெழுத்துப் போன்ற ஏந்துகளுக்காகத் தமிழை இப்படித்தான் எழுதிச் சீர்திருத் தம் செய்ய வேண்டுமா?

யாப்பிலக்கணத்தில் இவற்றின் நிலை என்ன? முற்றிலும் மாறு பட்டுப் போகாதோ? வெண்பாவில் பூச்சீரும், கனிச்சீரும், கலித்தளை யும் வந்து மயங்குகின்றனவே? ஏனிந்த மயக்கமோ?

இதனால் ஏதேனும் பயன் உண்டா? நூலாசிரியரே கூறுகின் றார்.

www.thamizham.net - Free E book No 7414

Generally two disadvantages are experienced
[practically.

1. The Reformed Scripts occupy more space.

2. The Reformed Scripts take more time.

இப்படி மிகுந்த இடத்தையும் மிகுந்த காலத்தையும் வீணாக்கும் சீர் திருத்தம் தமிழ்மொழிக்குத் தேவைதானா? இன்றியமையாததுதானா? எண்ணி விடைகூறுங்கள். மேலும் மேலேகண்ட குறளின் வரிவடிவத்தோற்றம் இப்போதைய நிலையிலிருந்து எவ்வளவு தொலைவு பின்னோக்கியும் விலகியும் இருக்கிறது என்பதைச் சற்று எண்ணுங்கள். தமிழ் எழுத்துச் சீர்திருத்தம் என்பது இன்றைய தமிழின் வரிவடிவத்தோற்றத்திலிருந்து நெடுந்தொலைவு விலகாமலும், மாற்றம் பெருமலும் இருக்கவேண்டும். ஆனால் ஆங்கில எழுத்துகளைப்போல் குறைந்து விரிந்த அளவில் பயன்தருதல் வேண்டும். அதைச் செய்யும் அறிஞர்கள் தமிழகத்தில் பிறக்கவில்லையா? தமிழ்மக்களின் உணர்வையும், பழமையையும், மரபுகாக்கும் பண்பையும் மறந்து செய்யும் எந்த எழுத்துச் சீர்திருத்தமும் தமிழகத்தில் வேரூன்ற முடியுமா? இதையெண்ணிப் பாராமலே அறிஞர் பெருமக்கள் சீர் திருத்தம் செய்யப்புகுவது எற்றுக்கோ?

திரு. தெ. பொ. மீ: அடுத்து 'The Tamil Script Reform" என்னும் தலைப்பில் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் ஆங்கிலக்கட்டுரை ஒன்றை "தமிழ்க் கல்ச்சர்" என்னும் இதழொன்றில் எழுதியுள்ளார்* அதனில் அவர் எல்லாரையும் போலவே பல எழுத்துகளுக்கு மாற்றம் தேவை என்று கூறுகிருர். அதோடு தமிழ் மொழியில் உள்ள உகர ஓசையை உடைய எழுத்துகளுக்கு ஒரு புதுக்கலப்பைத் தருகிருர். தமிழ் எழுத்துகளில் உகர ஓசையுடைய எழுத்துகளே (கு, சு, டு, து, பு, று என்று) குறுமையிலும் நெடுமையிலும் பலவேறுபட்ட வரிவடிவங்களைத் தந்து நம்மைக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. அவ்வெழுத்துகளுக்கே தட்டெழுத்துப் பொறியிலும் சரி, அச்செழுத்திலும் சரி நிறைந்த தட்டுக்கோல்களையும் எழுத்துகளையும் செய்யவேண்டியதிருக்கிறது. இஃது இடர்ப் பாட்டிற்கு உரியதொன்றே, அறிகின்றோம். அதற்கொரு மாற்றமும் தேவைதான்; உணர்கின்றோம். அதற்காக ஆசிரியர் கண்டுபிடித்துக் கூறும் கருத்து ஏதமானதாகவும் அருவருக்கத் தக்கதாகவும் இருக்கிறது என்று கூறின் தவறில்லை. அஃது என்ன?

* Tamil Culture Vol. II No I 1952

வடமொழியில் ஜ, ஷ, ஸ, ஹ என்பன போன்ற எழுத்துகள் உள்ளன. அவை உகர ஓசை பெறவேண்டுமானால் பெறுகின்றபோது புதிய எழுத்தாக மாறுவதில்லை.

அவை ஜு, ஜூ, ஷு, ஷூ, ஸு, ஸூ, ஹு, ஹூ, என்று மேலே விலங்குமட்டும் பெறுகிறது. அதற்குத் துணையாக அவைகள் நாடுவது ு ூ என்ற குறியீடுகளை.

எனவே அக் குறியீடுகளையே நம்முடைய தமிழின் உயிர் மெய் யெழுத்துகளான, க, ச. த, ப, ற என்பனவற்றின் மீது இட்டுக் கு, கூ (கு, கூ) என்பன போன்று உச்சரித்துக் கொள்ளலாம் என்று தம் கருத்தைக் கூறுகிறார்.

The கு (Ku) and கூ (Ku) Series as they stand at present defy any such analysis. The gordian knot as has been suggested can be cut by introducing new symbols for the short U and the long U thus saving another new letter faces. There are already the Symbols in use for some of Gramtha letters included in the new alphabetical list of Twentieth Century such as ஜ, ஸ, ஷ. ஹ, and க்ஷ-These Symbols are ு and ூ used in ஜூ etc . etc , Therefore, there is no necessity for going in for any new letter face at all, and nothing except prejudice prevents the editors and authors using these forms uniformly for all the letters.

But as matters stand at present feelings run very high whenever there is a suspicion baseless it may be. that Sanskrit usage is being forced on Tamil. The very idea of a reform of the Script is resisted from all sides in other countries.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்ற உயர்ந்த, விரிந்த, பரந்த மனப்பான்மை தேவையானதுதான், அதற்காக, எங்கே? எப் போது? எதில்? என்றெல்லாம் ஒன்றுமே இல்லையா?

தமிழர்கள் தமிழ்மொழியில் வடமொழியின் வல்லாண்மை கூடாது என்று கருதுகின்றார்கள். வடமொழியின் ஆட்சி தமிழ் மொழியில் ஏற்படுமோ என்று தமிழர்கள் அஞ்சுகின்றார்கள். என் றால் அதனை ஆதாரமற்ற அச்சம் என்று எவ்வாறு குறிப்பிட முடி யும்? வடமொழிக்கு உரிய உகர ஓசைக் குறியீடுகளாகிய ு ூ இவற் றைத்தான் தமிழில் சேர்த்துப் புதிய உகர ஓசையுடைய எழுத்து களை உண்டாக்க முடியுமா? அவையின்றி வேறுவகையில் எண்ணக் கூடாதா என்ற கேள்விகள் எல்லாம் எழும்புகின்றன. (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7414

எண்கை நீர் உயிரினம். (OCTOPUS)

-த. சலாவுத்தீன், அறி. இ., ஆ. ப.

நீரில் எண்ணிக்கையற்ற பல உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றைப் பற்றி அறிவியலறிஞர்கள் பல ஆராய்ச்சிகள் செய்து புதிய வியத்தகு உண்மைகளைக் கண்டுகொண்டே இருக்கின்றனர். ஒவ்வோர் உயிரினத்தின் வாழ்க்கையும், நம்மை வியப்பில் ஆழ்த்து கின்றது. இக்கட்டுரையில் எண்கைநீர் உயிரினத்தைப்பற்றி அறிந்து கொள்வோம். இவ்வுயிரினம் 'ஆக்டபோடா' (Octopoda the eight-armed Cephalopods) என்ற எண்கை உடைய உயிரின வரிசையைச் சேர்ந்தது. இதற்கு எட்டு ஒரே நீளமான (கைபோன்ற) உறுப்புகள் உள்ளன. இவ்வுறுப்புகளில் தசை உறிஞ்சிகள் உள்ளன. இதன் தலை கழுத்துடன் இணைந்திருப்பது தெளிவாகத் தெரியும். ஆண் இனத்தின் மூன்றாவது வலக்கை (hectocotylus) சிற்றின்ப உறுப்பாக வளர்கின்றது. சில வகைகளில் இக்கைநீக்கப்பட்டு பெண் இனத்தின் தலைப்பகுதியிலுள்ள மேல்குழியில் (mantle cavity) பாதுகாக்கப்படுகின்றது இஃது இனப்பெருக்கத்திற்காகப் பயன்படுத்தப்படுகின்றது.

இவ்வுயிரினம் தன் தசைக்கைகளால் தண்ணீரில் அகப்பட்டுக் கொள்ளும் மாந்தனை இறுகத் தழுவிக்கொள்ளும். அவன் மூச்சுவிட முடியாமல் இறக்கும் வரையில் பற்றி இருக்கும். முத்துக்குளிப்பவர்கள் இவற்றால் பல இடங்களில் இடுக்கணுக்குள்ளாகியிருக்கின்றார்கள். இவை கடலோரங்களிலுள்ள பாறை இடுக்குகள், பொந்துகள் ஆகியவற்றுள் தங்களின் மென்மையான உடலை மறைத்து வாழும். இவை தங்களின் கைகளில் அகப்படும் மீன் முதலியவற்றை உண்ணும். சில நேரங்களில் இவற்றைப் பெரிய மீன்கள், ஆமைகள் உணவாகக் கொள்வதுண்டு. இவற்றில் 36 வகைகள் உண்டு. இவற்றைச் சிறப்பாக நான்கு வகைகளாகப் பிரிக்கலாம்:

(அ) ஆழமில்லாக் கடல்களில் வாழ்பவை.

(ஆ) கடலின் மேல்பகுதியில் வாழ்பவை.

(இ) தடையில்லாமல் நீருக்கடியில் நீந்துபவை.

(ஈ) ஆழத்தில் வாழ்பவை (சிலவகைகள் நீருக்கடியில் 17,400 அடிகள் ஆழத்திலும் உயிர்வாழுகின்றன.)

மிகச் சிறியவை, 1½ விரற்கடை நீளமுள்ளவை; இவை இந்தியக் கடலில் வாழ்கின்றன. பெரியவை, 32 விரற்கடை நீளமுள்ளவை;

www.thamizham.net - Free E book No 7414

அலாசுக்கா (Alaska) நீர்நிலைகளில் காணப்படுகின்றன இவை பெரிய கண்களை உடையவை. வாய்ப்பகுதியில் இரண்டு இணை கூர்மையான, முட்களுள்ள அலகுகள் உள்ளன. இவ்வுறுப்புகள் மட்டுமன்றி அரம்போன்ற பகுதியுமுள்ளது. ஓடுகளைத் துளைசெய்து உணவை எடுத்துக்கொள்ள இவை பயன்படுகின்றன. சே. இசெட். யங். (J Z. Young) என்னும் ஆராய்ச்சியாளர், இவை அறிவுத்திற னுடையவை என்று கண்டுள்ளார். இன்னும் இவற்றின் அறிவுத்திற னைக் கண்டறிய பல ஆய்வுகள் நடந்த வண்ணமே இருக்கின்றன.

இனப்பெருக்கம்: குளிர்காலத்தில் இவை முட்டையிடுகின்றன. இவை $\frac{1}{8}$ விரற்கடையிலிருந்து $\frac{1}{2}$ விரற்கடை வரை இருக்கும். இவை 50,000த்திலிருந்து 180 000 வரை முட்டைகள் இடும். இம் முட்டைகள் பாறை இடுக்குகள், பொந்துகள் ஆகிய இடங்களில் இருக்கும். இவை பொரிக்கும்வரை 4-இலிருந்து 8 திங்கள்வரை பெண் எண்கை நீர் உயிரினம் காவல் காக்கின்றது. அவ்வப்போது முட்டைகளைத் தூய்மையும் செய்கின்றது.

தாக்கும் முறை: இவை எதிரிகளைத் தாக்கும்போது ஒருவகை மையைப் பீச்சியடிக்கின்றன. இம்மையினால் ஏற்படுகின்ற திரையால் தம் எதிரிக்குத் தெரியாமல் நழுவி விடுகின்றன. சிலவற்றின் மை எதிரிகளின்மீது பட்டு, அவற்றின் உணர்ச்சி நரம்புகளைத் தாக்கி விடுகின்றது. இவை கடிக்கும்போது உமிழ்நீரிலிருந்து ஓர் நச்சுநீர் வருகின்றது சில வகைகள் 'வண்ண உயிர்மங்களைக்' (Colourcells) கொண்டுள்ளன. இதனால் மிக விரைவாகத் தங்கள் வண்ணத்தை மாற்றிக்கொண்டு தங்கள் எதிரிகளிடமிருந்து தப்பித்துக்கொள்கின்றன.

பயன்: மிகப் பழங்காலந்தொட்டு இவற்றின் தசையை மாந்தர்கள் உண்டு வருகின்றனர். இன்றும் தமிழ்நாட்டில் பலர் இதைச் சுவைத்து உண்கின்றனர். இத்தாலியில் இவற்றைப் பிடிக்க, மண்ணால் செய்யப்பட்ட பெரும் பானைகளைக்கயிற்றால்கட்டி 50 இலிருந்து 100 அடி ஆழத்திற்குக் கடல் நீருக்கடியில் வைத்துவிடுகின்றனர். எண்கைநீர் உயிரினம் மெள்ள இப்பானைக்குள் ஒளிந்து கொள்ளுகின்றது. சில மணிகளுக்குப் பிறகு இப்பானைகளை நீருக்குமேல் கொணர்ந்து இவற்றை விற்பனைக்கு எடுத்துச் செல்லுகின்றார்கள். இவற்றை வேகவைத்தும், வறுத்தும், பலவகையான உணவாகச் சமைத்தும் உண்கிறார்கள். இவற்றை ஊறுகாயாகவும் செய்கின்றார்கள்.

தென்மொழிக்கு நன்கொடை.

7-8-68 முதல் 22-10-68 முடிய, தென்மொழி வளர்ச்சியில் அக்கறையும் ஆர்வமும் கொண்ட அன்பர்கள் விடுத்த நன்கொடைப் பட்டியல் வருமாறு. ஒல்லும் வகையில் அறவினை ஓம்பும் அத்தமிழ் நெஞ்சங்களுக்கு நம் நன்றியும் வாழ்த்தும் உரியவாகுக.

		உருபா.	காசு.
1.	திரு. மு. வ. பரமசிவம், நடுப்பட்டி	2	00
2.	திரு. இரா. அருமருந்தலைவன், இலக்குமிபுரம், கரூர்.	2	00
3.	திரு. மு. கிருட்டிணசாமி, த பொட்டக்கொல்லை.	10	00
4.	திரு. இரா. இராசாராம் சுடலைமுத்து, பாளையங்கோட்டை.	3	00
5.	திரு. பா. வளன்அரசு, எம். ஏ., பாளையங்கோட்டை	11	00
6.	திரு. தே. உலூர்து, எம். ஏ., பாளையங்கோட்டை	10	00
7.	திரு. நா. வேள், பழங்கரை	5	00
8.	திரு. பு. கா. இளமுருகன், செயலர், மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப்புளியம்பட்டி	5	00
9.	திரு. சி. பரமசிவம், உதவி மின்பொறியாளர், அவிநாசி	25	00
10.	திரு. அ. செல்லத்துரை, திருச்சிராப்பள்ளி-8	6	00
11.	திரு. மு. பரமசிவம், நடுப்பட்டி.	2	00
12.	திரு. அருள்மணி, பெங்களூர்.	10	00
13.	திருச்சி தனித்தமிழ் அன்பர் இயக்கம்	25	00
14.	திரு. கோ. சம்பந்தம், பொறி. இ., திருச்சிராப்பள்ளி (தமது திருமண அன்பளிப்பாக)	50	00
15.	திரு. C. P. L காதர், நாகபுரி.	2	00
16.	திரு. இரா. தங்கம், பாளையங்கோட்டை	2	75
17.	திரு. பார்த்தசாரதி நண்பர்கள், பரேலி.	6	00
18.	திரு. ப. சு. சுப்பிரமணியன், ஐவேலசு [மதுரை மாவட்டம்.]	2	25
19.	திரு. பு. கா. இளமுருகன், செயலர், மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப்புளியம்பட்டி.	4	00
20.	திரு. குமாரசாமி-திரு. பழநிசாமி சென்னை-3.	10	00
21.	திரு. சு. சந்திரன், மதுரை-15.	4	00
22.	திரு. மு. பெருமாள், மேற்கு மாம்பலம், சென்னை.	2	50
23.	திரு. கல்லை. பெருஞ்சித்திரன், கல்லுப்பட்டி.	25	00
24.	திருச்சிராப்பள்ளி தமிழ் மாநாட்டில் ஓர் அன்பர் அளித்தது.	3	00
25.	நெய்வேலித் தமிழன்பர் ஒருவர் அளித்தது	10	00
26.	திரு. ஆ. கருப்பையா, நெய்வேலி.	10	00
27.	திரு. பு. கா. இளமுருகன், செயலர், மறைமலையடிகள் மன்றம், புன்செய்ப்புளியம்பட்டி.	6	00

அமைச்சர், தென்மொழி.

www.thamizham.net - Free E book No 7414

பன்மொழி யறிவின் தீமை!

-புலவர். தி. நா. அறிவொளி-

இந் நூற்றாண்டில் நம்மிடை வாழ்ந்த ஆங்கிலப் பேரெழுத்தா ளர், 'சாமர்செட்மாம்' என்பவராவர். உலகில் பலநாடுகளைச் சுற்றி, அவ்வந் நாடுகளில் தங்கி வாழ்ந்து பல புதினங்களை இயற்றியவர். உலக நாகரிகங்கள், பழக்கவழக்கங்களை நன்குணர்ந்தவர்; உலகிய லறிவு வாய்ந்தவர். அவர் எழுதிய பொன்மொழி இஃது:

"I have my own views about learning a language. I think it waste of time to acquire a greater knowledge than suffices me to read fluently and talk enough for the ordinary offairs of life. The labour reqrired to acquire a real familiarity with a foreign tongue is profitless."

(W. Somerset Maugham.- A. writer's Note book. "The Partial View." P. 121.)

"ஒரு மொழியைக் கற்றுக் கொள்வது பற்றி, நான் எனக் கென்று உரிய நோக்கு கொண்டுள்ளேன். எளிய வாழ்க்கை நிகழ்ச்சி களுக்கு ஏற்ப எழுதவும் பேசவும் போதுமான அளவுக்கு மேல், பிற மொழியில் மிகுந்த பயிற்சிபெறுவது காலத்தைப் பாழாக்குவதாகும் என்பது என் எண்ணம். பிறமொழியில் உண்மையான தொடர்பை அடைய எடுக்கும் உழைப்பு பயனற்றதேயாகும்,"

இந்தக் கருத்து என்னுடையதன்று; உலக அறிஞர் சாமர்செட் மாமினுடையது! இக்கருத்தைக் கூறியவர் தமிழ்ப்புலவரல்லர்! அவ் வாறிருந்தால், உடனே, 'குறுகிய நோக்கினர், குள்ள உள்ளத்தர்; கிணற்றுத்தவளை; குட்டையின் அட்டை' என வசைபாடி விடுவர், நம் நாட்டுத் 'தேவாங்கு'கள்! ஆயின், மேலைநாட்டுப் பேரறிஞரின் அழுத்தந் திருத்தமான அடைவின் 'மெய்யறிவுரை இது'

ஆங்கிலப் பாவலர் பன்மொழியறிஞர் இலாங்குபெல்லோ என்ப வர், "தாம் தலைசிறந்த பாவாணராக மலராமைக்குக் காரணம், பல மொழிகளைப் படித்துத் தன்னறிவைச் சிதைத்துச் சீர்குலைத்துக் கொண்டமையே' என்று முதிர்ந்த அகவையில் 'அறிவுரை' முழங்கி னார்!

www.thamizham.net - Free E book No 7414

இதற்கிசையவே, இடைக்காலத் தமிழறிஞர் தென்மொழியோடு வடமொழி முதலிய பிறமொழிப் பயிற்சியில் ஆர்வங்காட்டியமையால் தனிஎண்ணப்பேராற்றலோடு தமிழருக்கேயுரிய ஆக்க இலக்கியங்கள், படைப்பிலக்கியங்கள், இயல்நூல்கள் தோன்றுமற் போயின. இன்று; 'மொழி-இலக்கிய மலர்ச்சி' அரும்பியமைக்கு அடிப்படை யாதெனில், தாய்மொழிப் பயிற்சி தனித்துச் செழித்தமையே என்பதை யாவரும் அறிவர். ஊர்தோறும் தமிழார்வலரும் எழுத்தாளரும் பாவலரும் நாடோறும் பெருகி வருவதை நன்கறிபவர் இதற்குரிய உண்மைக் காரணத்தை நன்கு தெளியவேண்டும். தமிழிலே எண்ணுந்திறன் தழைத்ததும், தமிழில் அறியும்-உணரும் திறன் வளர்ந்ததுந்தான் மக்கள்ஆக்கத்திற்கும், நாட்டு முன்னேற்றத்திற்கும் வேர்நிலையாகும்.

பலமொழிச் சொற்களை, எழுத்துமுறையை, இலக்கணத்தை, மொழியமைப்பை, வரையறையை அறிவதற்கு நாம் செலவு செய்யும் உழைப்பு, காலம், செல்வம், முயற்சி, மிகையூக்கம் அத்தனையும் நம் உரிய ஆக்க முனைப்பை, அறிவுவளர்ச்சியைத் தடுத்து அழிக்கிறது. நம் உணர்வின் இயல்போட்டத்தைச் சீர்குலைத்துச் சிதைவை உண்டாக்கி விடுகிறது. எவ்வளவுதான் முயன்று கற்றாலும் பிறமொழியில் நிறைபுலமை பெறுவது அரிதினும் அரிதே. இதற்கு வேறு சான்றெதுவும் வேண்டுவதின்று. தமிழ்நாட்டிற்கு வந்து இரண்டாயிரம் ஆண்டுகளாகியும் ஆரியர் பேசும் தமிழின் அழகை நாடு நன்கறியுமன்றோ? பிறமொழியாளர்-குறிப்பாக வடநாட்டார்-தமிழைப் பேசிக் கொலைபுரிவதை யாரே அறியார்? இந்நிலையில்தானே நாமும் பிறமொழியைக் கற்றுச் சீர்குலைப்போம்! ஒரு சிலர் இயல்பில் பன்மொழிப் புலமை பெறுபவராக இருப்பர். அவர்கள் புறநடைக் கிலக்கியமானவர்கள். பேரறிஞர். தேவநேயப் பாவாணரும், பன்மொழியறிஞர். கா. அப்பாத்துரையாரும் புறநடையில் கருதத் தக்கோராவர். எளிய மாந்தர்களோடு பேரறிவாளரை ஒருங்கு வைத்தெண்ணலாகாது.

ஆங்கிலத்தையே பயின்ற தமிழர் தாய்மொழியில் பேச, எழுத எத்துணை தடுமாறுகின்றனர்! இவர்களின் பாட்டனும், பாட்டியும் பேசி-எழுதிப் பழகிய மொழியை ஓரளவு மறந்தமையாலேயே இத்துணை அல்லல் வருகிறதெனின் பிறமொழியைப் புதிதாகக் கற்றுத் தெளிந்து தேர்ச்சி பெறுதல் எவ்வளவு பெரும்பாடு என்பதை விளக்க வேண்டுவதில்லை.

www.thamizham.net - Free E book No 7414

மாற்றார், தமிழனைத் தட்டிக்கொடுத்துப் பாராட்டியே அவனை முட்டாளாக்கி வீழ்த்திவிடுவதில் திறமை மிக்கவர்களாயுள்ளனர்.

"தமிழர்கள் அறிவாளிகள்; நல்ல மூளையுள்ளவர்கள்; பலமொழிகளைப் பயில்வது அவர்களுக்கு எளிது. ஆகவே இந்தியைக் கட்டாயமாகக் கற்றுக் கொள்ளுங்கள்" என்று மடவர் சிலர் பேய்ப்பிதற்றலாகப் பிதற்றுகின்றனர்.

அவ்வாறுனுல், அமைச்சர்கள் உட்பட வடநாட்டார் அனைவரும் முட்டாள்களா? அப்படி முட்டாள்களானுல், முட்டாள்களின் கருத்துக் கிசைந்து அறிவாளிகள் அடங்கிப் போகலாமா? அப்படிப் போவது அறிஞர்களின் அறியாமையைக் காட்டுமே தவிர, அறிவைக் காட்டாதே!

வடநாட்டார் பிறமொழியை-ஆங்கிலத்தைப் படிக்க விரும்பவில்லை. தன்னை முட்டாள் என்று ஒப்புக்கொண்டேனும் மாற்றானை இந்தி படிக்கவைக்க வேண்டுமென்ற குள்ளநரிச் சூழ்ச்சியேதவிர, இஃது உண்மையன்று!

இந்தியாவுக்கு இணைப்புமொழியாக ஆங்கிலம் ஒன்றே போதும். தாய்மொழி, மாநிலநிலையிலும், நடுவணரசில் ஆங்கிலமும் வழங்குவதொன்றே சீரிய முறையாம். இந்தியா ஒரு தனி உலகமன்று. இன்று உலகமெலாம் ஒன்றுக வேண்டும் என்ற ஒருலகக் கோட்பாடு முழங்குகிறது. 'உலக அரசு' அமைய வேண்டும் என்று அறிஞர்கள் முயல்கின்றனர். உலக உறவை வளர்க்க வேண்டிய காலத்தில், இந்தியைத் திணித்துக்கொண்டு, ஆங்கிலத்தைப் புறக்கணிப்பது எவ்வளவு அறியாமை யென்பதை நம் நாட்டினர் தெளிவாக உணரவேண்டும். ஆங்கிலத்தின் இன்றியமையாமையை உணர்த்தும் போது, அதைத் தெய்வத்தின் இடத்தில் வைத்து வழிபட வேண்டுமென்பதன்று எம் கொள்கை.

ஒருமைப்பாடு என்பது இந்தித் திணிப்பைக் கொண்டதாக இருக்குமாயின், ஒருமைப்பாடு வேண்டா. 'ஒருமை' என்ற பெயரால், 'அடிமைத்தனம்' வலியுறுத்தப்படுவதை அறிவுள்ள தமிழர் எக்காலத்தும் ஏற்கமாட்டார்கள். "இந்தியா ஒன்றுகவிருந்து செழிக்க வேண்டுமானுல், எக்காரணங் கொண்டும், எந்நிலையிலும் எவ்வடிவிலும் எம்முறையிலும் எத்தகுதியிலும் எவராலும் எவ்வகை அடிமைத்தனையும்,

www.thamizham.net - Free E book No 7414

கட்டாயமும், திணிப்பும், வற்புறுத்துதலும், நசுக்குதலும், சுரண்டுதலும் அச்சுறுத்துதலும், ஆணவப் போக்கும், இடுக்கித் தாக்குதலும், சட்டநடவடிக்கைகளும் இருக்கவே கூடாது.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தினை மீண்டும் ஒரு குழு அமைத்துத் திருத்தவேண்டும். மாநில அரசுகள், தம் வளர்ச்சியை வலிவாக்கிக்கொள்ள முழுஉரிமை பெறுமாறு சட்டத்திருத்தம் வேண்டும். நடுவரசு வல்லரசு போலவும், அதற்கடங்கிய அடிமைச் சிற்றரசு போல் மாநிலங்களும் இருக்கும் இழிநிலை கூடவே கூடாது.

பிறமொழிக் கல்வி, பிறமொழியறிவு, பிறமொழிப் பழக்க வழக்கங்கள், பிறநாட்டு வெறி நம்மை, நம் மரபை; நம் ஒழுகலாற்றை நம் மவரை மிக மிக மிக இழிந்த நிலையில் கெடுத்தழித்திருக்கிறது. இவ்வுண்மையைத் தெளிந்தாலொழிய நாம், நம்மொழி, நம்நாடு, உயரவோ வளரவோ வாழவோ இயலாது.

ஒழுக்கக்கேடும், தீமையுங்கூடப் பார்த்துப் பின்பற்றுதலினூற்றுன் பெரிதும் வளர்கிறது; பரவுகிறது. 'பிறர் செய்யுங் குற்றத்தை நாமும் செய்தாலென்ன?' என்ற எண்ணம் பலரைத் தவறு செய்யத் தூண்டுகிறது. முறைப்பட எண்ணும் பயிற்சியை, நெறிவழிமேவும் அறிவை, குறள்வழிவாழும் உள்ளத்தை, தமிழ்மரபில் நிலைபெறும் வாழ்வை மக்களுக்குப் பயிற்றுவதாகத் தமிழகக் கல்வி அமைய வேண்டும். தீய எண்ணத்தை நீக்க, குறைக்க குமுகாயத்தில் அணுவளவு முயற்சியும் நடைபெறவில்லை யென்பதை நெஞ்சக்குருதி பொங்க வருந்திக்கூற வேண்டியிருக்கிறதே! 'மாறுபட எண்ணும்' பழக்கம் இளைஞர்-இளமகளிர்பால் மிகுவது தமிழகத்தை அளறுக மாற்றி வருகிறது. இதனைத் தடுக்காமற்போனுல், கல்வி யென்பதோ, அறம் என்பதோ, பண்பாடு என்பதோ, கற்பு என்பதோ, ஒழுக்கம் என்பதோ, சால்பு என்பதோ எல்லாமே பொய்யாகிப்போகும்! நாடு புழுக்களின் காடாகும். வெறியர் கூட்டம் வெம்பித் திரியும் சுடுகாடாகத் தமிழகம் சீர்குலையும்! தீமைத் தடுப்பு. குற்றத்தடுப்பு-நோய்த் தடுப்பைவிட-நனி இன்றியமையாதது என்பேன்.

'பிற இழிந்தவற்றில்' உள்ளஞ் செலுத்திய தமிழிளைஞர்களே! தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடுபற்றி உங்கள் கருத்தைத் திருப்புங்கள்! மொழிப்பற்றைத் தமிழனுக்கு ஊட்டவேண்டிய இழிநிலை இனியும் இருக்கலாமா?

www.thamizham.net - Free E book No 7414

"என் தாய்மொழி (வங்காளி) மிகப் பொறுமைக்கொண்ட வீட்டுக்காரி; அவள் எனது முழுப்பணியையும் தனக்கே வேண்டுகிறாள். வேறு எவரையும் தன்னுடைய ஆட்சிவரம்பிற்குள் நுழைய அவள் இசைவளிப்பதில்லை.', என்று வங்கப் பாவலர் தாகூர் கூறிய பொன்மொழியைத் தமிழர் எண்ணவேண்டாவா? தாய்மொழிப்பற்று எத்துணை முதன்மையானதென்பதை நோபல் பரிசு பெற்றவர் கூறிய பின்னும் 'மரமண்டையர்' சிலர்க்குப் புரியாதது வியப்பேயன்றோ?

நடுநிலையற்ற தமிழர்கள் தம் பேச்சால், எழுத்தால், செயலால், தமிழினத்திற்கே தீரா இடும்பை சூழ்கின்றனர். இவர் தம் போக்கைத் திருத்துதல் நல்லோரின் இடையறா முயற்சியாயிருக்க வேண்டும். கட்சியுணர்வு இனவெறி, சமயவெறியினும் கேடுபாடுடையதாயிருக்கிறது. கட்சியைவிட நாடும், இனமும், மொழியும் பண்பாடும் அறமும் மரபும் இன்றியமையாதவை. பெரியவை; அரியவை; ஒள்ளியவை; பல்லூழி வாழ்ந்து வளரவேண்டியவை. மரபைச் சிதைக்காமல் தங் கொள்கைகளை வளர்க்க 'இயலாதவர்'. மரபைச் சிதைப்பதில் குற்றமில்லை!

பொது மக்களிடம் தொடர்பு கொள்ளத் தாய்மொழியே தலைசிறந்த வாயில். தாய்மொழியில் ஆற்றல் சான்ற அறிவுபெறுதல் மக்களிடம் செல்வாக்கும் உயர்மதிப்பும் பெற விழைபவர்க்கு தனிமிக இன்றியமையாத இயல்பாகும். தமிழக அரசுத்துறை அதிகாரியரும், ஊழியரும் தமிழைக் கரவாக, மறைவாக எதிர்த்தும், பழித்தும், இழித்தும் பேசியும் நரிச்செயலில் ஈடுபட்டும் வருவது கொலையொறுப்பு தாத்தக்க உலகப் பெருங்குற்றமாகும். இவ்வினப் பகைவரை அழிப்பதினும் பேரறம் வேறிருக்காது. தமிழகம் தானீன்ற சேய்களாலேயே தடைக்கும் தடுமாற்றத்திற்கும் ஆளாகும் பேதைமையை என்னெனக் கூறுவேன்? தமிழகமே; நீ தாழ்ந்து வீழ்ந்தது போதாதா? நீ உயர்ந்தோங்கவே கூடாதா? O

O உங்கள் ஊரில் உலகத் தமிழ்க் கழகம் தோற்றுவிக்கப் பெற்றதா?

O இதுவரை இல்லையென்றால் உடனே தோற்றுவிக்க அனைத்து ஏற்பாடுகளையும் இன்றே மேற்கொள்ளுங்கள்.

O எல்லாவற்றிற்கும் உங்கள் ஊர் மாவட்ட அமைப்பாளருடனோ பொதுச் செயலாளருடனோ உடனே தொடர்பு கொள்ளுங்கள்.

www.thamizham.net - Free E book No 7414

இந்திய வானூர்திச் செய்திறன் வளர்ச்சி.

பா. திருநாவுக்கரசு, இ. பொ.

[இந்திய வானூர்தி, பொறியியல்கழக
இணை, பட்ட உறுப்பினன்]

1951-ஆம் ஆண்டில் ஒருநாள் பெங்களூரில் முன்னாள் இந்தியத் தலைமை அமைச்சர் நேரு முன்னிலையில் முதன்முதலாக இந்தியாவில் வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பட்ட எச். எஃப். 24 போரூர்தி (H F. 24 FIGHTER) தன் பீச்சுப் பொறி (Jet Engines)களிலிருந்து ஆவியினை வெளியேற்றி ஓடும் பாதையிலிருந்து மேலெழுந்து பறந்த அன்று இந்திய வானூர்தி வளர்ச்சியின் இரண்டாம் கட்டம் தொடங்கியது.

இருபத்தெட்டு ஆண்டுகட்கு முன்னர், 1940-இல் இந்தியர்கள் ஒரு சிறு திருகாணியைக்கூடச் செய்யத் திறனற்றவர்கள் எனக் கருதப்பட்டு, வெளிநாட்டிலிருந்து அதனை இறக்குமதி செய்து வந்த போது, இதனைப் பொய்ப்பிக்கவும், இந்தியத் தொழில்வளம் பின் தங்கியிருந்தமையும் எண்ணி, அமெரிக்கக் கண்டத்தொடர்பு இணைப்புக்கழகத்தின் (Intercontinental corporation) உதவியோடு, இந்திய மைசூர் அரசுகளோடும் சேர்ந்து, திரு. வால்சந்த் ஈராசந்த் பெங்களூரில் இந்திய வானூர்தித் தொழிலகத்தைத் தொடங்கினார்.

தொழிலகம் தொடங்கி, ஆறுதிங்களில் முதலூர்தி கட்டி முடிக்கப்பட்டது. இரண்டாண்டுகள் கழித்து உலகப்போர் தொடங்கியமையால், தொழிலகத்தை இந்திய அரசு திரு. வால்சந்திடமிருந்து பெற்று, வானூர்திகளைச் செப்பனிடவும் பழுது பார்க்கவும் ஒரு தளமாக இயங்க, அமெரிக்கத் தரைப்படைக்குக் கொடுத்தது. ஈராண்டில் வடிவமைப்புப் (Design)பிரிவு தொடங்கப்பட்டு, (பொறியற்ற) சறுக்கு வானூர்தி (Glider) கட்டப்பட்டதெனினும் ஊர்தி செய்விப்பு நிறுத்தப்பட்டுப் பல்வேறு வகையான அமெரிக்க ஊர்திகளைச் செப்பனிடுதலுக்கே பணிபுரிந்தோரின் உழைப்பு பயன்படுத்தப்பட்டது.

வேலை மிக்கிருந்த அக்காலத்தில் 16,000 ஆட்களை அமர்த்தித் தரம் மிக்க பணிபுரிந்து. கீழ்த்திசை நாடுகளில் புகழ்பெற்று

www.thamizham.net - Free E book No 7414

அமைந்திருந்த இத்தொழிலகத்தினைப் போருக்குப் பின்னர் இந்திய அரசு தன் வயமேற்றுப் பொறுப்பேற்றது. போருக்குப்பின் பணி குறைந்தமையால், பணியாளர்கள் 3,000 ஆகக் குறைக்கப்பட்டுப் போர்க்கால 'டக்கோட்டா' வானூர்திகளைப் போக்குவரத்துத்துறை பயன்படுத்தும் வண்ணமாக, அவற்றை மாற்றியமைக்கும் பணியில் ஈடுபட்டு மாற்றினார்.

இந்தியத் தொடர்வண்டித் துறைக்குத் தேவையான மாழைத் தொடர்பெட்டிகள் வடிவமைக்கப்பட்டுக் கட்டப்பெற்றன. அண்மைக் காலத்தில் இப்பிரிவு தனியாகப் பிரிக்கப்பட்டுப் 'பாரதநிலப் பண் படுத்தும் பொறி' (Bharath Earthmovers) தொழிலகத்தோடு இணைக்கப் பட்டுள்ளது.

இந்தியா தன்னுரிமை பெற்றபின்னர், இங்கிலாந்து நாட்டு நிறுவனத்தின் இணக்கம் பெற்று மூன்றுவகையான 'பிரன்டிசு' பயிற்சி வானூர்தி (Trainer), 'வேம்பயர்' போர் ஊர்தி, நாட் (Gnat) போர் வானூர்திகளைப் பெங்களூர் தொழிலகம் கட்டி முடித்தது. இந்திய வடிவமைப்பில் உருவாக்கப்பட்ட வானூர்தியான மீயொலிப்போரூர்தி எச். எப். 24 (H. F. 24 Supersonic Fighter), பீச்சுப் பொறி யமைந்த வானூர்திகளைஇயக்க-பயிற்சிபெற 'பீச்சுப்பயிற்சிவானூர்தி' (Jet Trainer), முன்செலுத்தி (Propeller) கொண்ட புசுபக் பயிற்சி ஊர்திகளும் பெங்களூர் வானூர்தித் தொழிலகத்தில் செய்யப்படுகின்றன. திருகிறக்கை ஊர்தி (Helicopter) செய்வதற்கான ஏற்பாடுகள் அண்மையில் பிரான்சு நாட்டிலுள்ள தொழில் துறையாரின் இணக்கம் பெற்றுத் தொடங்கப்பெற்றுள்ளன.

வானூர்தியினை வடிவமைத்துச் செய்தலோடு, அதற்குத் தேவையான பீச்சுப் பொறியினையும் செய்ய, ஒருபிரிவு அமைக்கப்பட்டுப் 'பிரிசுடல் ஆர்பியர்சு' (நாட் போரூர்திக்குத் தேவையான பொறி), டார்ட் (Dart) (எச். எசு. 748 போக்குவரத்து ஊர்திக்குத் தேவையானது) ஆர்டுசுடு (திருகிறக்கை ஊர்திப் பொறி) இவற்றைச் செய்து வருகின்றது.

1962, சீனத் தாக்குதலுக்குப் பின்னர், உருசிய நாட்டினர் மிக்-21 போர் வானூர்தி செய்ய உதவி செய்தமையால், அதற்குத் தேவையான ஊர்திச்சட்டம், இறுதி இணைத்தல் (Air Frame and

www.thamizham.net - Free E book No 7414

Final Assembly நாசிக்கிலும் (மகாராட்டி மாநிலம்) பீச்சுப் பொறி கொராபுட் (ஒரிசா) டிலும், மின்னியல் செய்கருவிகள் (Electronic Equipment) ஐதராபாத்திலும் தொழிலகங்கள் அமைக்கப்பட்டுச் செயற்பட்டு வருகின்றன. 'ஆவ்ரோ' எனப்படும் போக்குவரத்துத் துறை பயன்படுத்தும் எச். எசு.748 வானூர்தி, கான்பூரில் கட்டப்படுகின்றது. 1964-ஆம் ஆண்டிலிருந்து பெங்களூர் தொழிற்கூடத்தோடு மற்ற நான்கும் (நாசிக். கொராபுட், ஐதராபாத், கான்பூர்) இணைக்கப்பட்டு, அனைத்தும் ஒரே தலைமையில் இயங்கி வருகின்றன.

இந்தியாவில் செய்யப்பெறும் வானூர்திகளைப் பற்றி:

எச். எப். 24: இம் முதல் இந்தியப்போர் வானூர்தியின் வடிவமைப்பாளர் பண்டாரகர் குர்க் டாங்க் (Dr. Kurk Tank) தலைமையில் இந்திய வல்லுநர் குழு பெங்களூரில் தொடங்கப்பட்டது. 1961 சூன் 24.இல் முதல் உரு (Prototype) முதலில் விண்ணில் சென்றது. இரண்டு ஆர்பியசு 700 பீச்சுப்பொறிகளைத்தன் உடலில் (Fuselage) கொண்டிருக்கும் இவ்வூர்தி, அதன் பீச்சு விசையால் இயங்குகிறது. மறுவெப்ப அமைப்பு (Reheat System) உதவிகொண்டு குறுகிய காலத்துக்கு ஒப்பு ஒலி எண் (Mach Number) 14-இல் பறக்கும். ஒப்பொலி எண் என்பது வானூர்தியின் விரைவுக்கும் ஒலியின் விரைவுக்கும் உள்ள விழுக்காடே (ratio).

எச். எப். 24-இல் சிறகுக்கு அடியிலுள்ள களஞ்சியத்தில் 1000 கன்னிறை (பவுண்டு) வெடிகுண்டும், வானிலிருந்து தரைக்குப்பாயும் ஏவுகணையும் (Air to Surface Missile) வைக்கலாம். இரு பொறிகள் இருப்பது; ஒன்று பழுதுற்றாலோ அல்லது பகைவனின் தாக்குதலுக்கு இரையானாலோ மற்றொன்று கொண்டு கீழிறங்கப்பயன்படும்.

நாட்: ஒருவகைக் கொசுவின் பெயர்கொண்ட இப்போர் வானூர்தி 1965-இல் நடந்த பாகிசுதான் இந்தியப் போரில், இந்திய வெற்றிக்கு வழிகோலியது. இங்கிலாந்து நாட்டின் 'ஆக்கர் சிட்லி' யின் இணக்கம் பெற்று இங்குச் செய்யப்படுகின்றது. உலகிலுள்ள மாறு ஒப்பு ஒலி (Transonic)அமைந்த சிறிய பீச்சுப் போர் வானூர்திகளில் விண்போரில் நாட் மற்றனைத்தையும் மிஞ்சும் திறன் உடையது. எரிபொருள் சிறகில் சேர்த்து வைத்தல் இல்லாமையால், இதன்மீது பகைவனின் தாக்குதல் ஓரளவு குறைக்கப்பட்டுள்ளது. 1000 கன்னிறை வெடிகுண்டுகளையோ அல்லது சமமான ஏவுகணை

www.thamizham.net - Free E book No 7414

களைப்போ எடுத்துச்செல்லும் இப்போரூர்தியில் இரண்டு 30.மி.மீ. வேட்டகங்கள், காற்று இழுப்பானுக்குப் (Air Intake Duct) பக்கத்தில் பொருத்தப்பட்டுள்ளன

பீச்சுப் பயிற்சி வானூர்தி: பீச்சுப் பொறியுள்ள வானூர்திகளை இயக்குவதற்கும் முன் செலுத்திக் கொண்டுள்ள வானூர்களை இயக்குவதற்கும் மிக்க வேறுபாடுள்ளமையால், பீச்சு வானூர்திகளை இயக்கும் பயிற்சிதர வான்ஓட்டி (Pilot) களுக்குப் பெங்களூரில் செய்யப்பெறும் எச். சே. டி. 16 (H. J T. 16) பயன்படுத்தப்படுகின்றது.

1961-இல் பர். காட்கே என்ற இந்தியரால் வடிவமைக்கப்பட்டு, 1964-இல் வெள்ளோட்டம் விடப்பட்டது. இவ் வானூர்திக்குத் தேவையான பீச்சுப் பொறி 'வைபர்' எனும் இங்கிலாந்து நாட்டின் பொறி பயன்படுத்தப்படுகின்றது. இதற்கு மாற்றாக எச்.சே. இ-2500 (H. J. E. 2500) என்ற பீச்சுப் பொறியினை இங்குச் செய்ய எண்ணி வடிவமைத்து, முதல் உரு செய்து முடிக்கப்பட்டுள்ளது. ஆய்வுகளில் தேறி, சான்றிதழ் பெற்ற பின்னரே இதனைப் பயன்படுத்த இயலும்.

முன்செலுத்தி வானூர்திகள்: 'கிருசக்' எனப்படும் நால்வர் செல்லும் வானூர்தியும், 'புசுபக்' என்னும் இருவர் செல்லும் பயிற்சி வானூர்தியும் பெங்களூரில் செய்யப்படுகின்றன. வேளாண்மைத் துறைக்குத் தேவையான வானூர்தி வடிவமைக்கப்பட்டு வருவதாகத் தாளிகைகள் அறிவிக்கின்றன.

திருகிறக்கை ஊர்தி (Helicopter): 'அலூட்டி-3' எனும் திருகிறக்கை ஊர்தி, பிரான்சு நாட்டு 'சுத் ஏவியேசனி'ன் இணக்கம் பெற்றுப் பெங்களூரில் செய்யப்படுகின்றது. இவ்வூர்திக்குத் தேவையான 'ஆர்டுசுடு-3' பீச்சுப்பொறி, பெங்களூரிலுள்ள 'பொறியியற் பிரிவில்' செய்யப் பெறுகின்றது,

நிலையிலிருந்து செங்குத்தாக எழும்பிப் பறக்கும் இக் கலத்தில் அறுவர் செல்லலாம். பயன்மிக்க இவ்வூர்தி காட்டுப் பகுதியில் குறிப்பிட்ட இடத்தை அணுகுதல், வெள்ளப் பகுதியில் விண்ணிலிருந்து உணவிடல், குறைந்த அளவில் போர் மறவர்களை அழைத்துச் செல்லல் போன்றவைகட்குப் பயன்படுத்தப்படுகின்றது.

www.thamizham.net - Free E book No 7414

தொடர்ச்சி-2.

ஓர் அறிவியல் நாடகம்

தொலைபேசி.

"செங்குட்டுவன்"

காட்சி-3

இடம்: பெல்லின் ஆய்வகம்.

உள்ளோர்: பெல், வாட்சன், மேபெல்.

காலம்: கி. பி. 1903-இன் இறுதியில் ஒருநாள் காலை.

வாட்சன்: தலைவரே! தாங்கள் கூறியவாறு இறந்த மாந்தன் ஒருவனின் செவிப்பறைச் சவ்வைக் கொண்டு வந்துள்ளேன். ஏதோ ஒலி வரைபடக் கருவியொன்றை அமைக்க வேண்டுமென்று கூறினீர்கள். முறையைக் கூறினால் செய்து முடித்துவிடுகிறேன்.

பெல்: (சவ்வை வாங்கிப்பார்த்து) இச்சவ்வுடன் ஓர் ஊசியைப் பொருத்தி, ஊசி ஒரு புகைக்கண்ணாடிச் சட்டத்தின்மேல் படிந்திருக்குமாறு செய்யவேண்டும். சவ்வின் மறுபுறத்

(முன்பக்கத் தொடர்ச்சி)

மிக்-21 (Mig-21): உலகில் மிகு அளவில் பயன்படுத்தப்படும் பீச்சுப் போரூர்தியான மிக்-21, உருசிய உதவி கொண்டு இந்தியாவில் செய்யப்படுகின்றது. இவ்வூர்தியின் வெவ்வேறு வகைகள் கிழக்கு ஐரோப்பிய நாடுகள், சைனா, வடக்குக் கொரியா, சில மையக் கிழக்கு நாடுகள், பின்லாந்து, கியூபா, வட வியட்நாம் நாடுகளில் பயன்படுத்தப் படுகின்றன. ஒப்பு ஒலி-2.இல் பறக்கும் இப்போரூர்திக்கு வேண்டிய பீச்சுப் பொறி ஒரிசா மாநிலத்திலும், மின்னியல் செய்கருவிகள் ஐதராபாத்திலும், ஊர்தி இணைப்பு மகாராட்டிரத்திலும் செய்யப்படுகின்றன.

எச். எசு. 748: இரு முன் செலுத்திகள் கொண்டு 'ஆவ்ரோ' என அழைக்கப்படும் இவ்வூர்தி, இந்திய வான் போக்குவரத்துத் துறையினருக்காகக் கான்பூர் பிரிவில் செய்யப்படுகின்றது. இதற்குத் தேவையான பொறிகள் பெங்களூர் தொழிற்கூடத்தில் செய்யப்படுகின்றன. O

www.thamizham.net - Free E book No 7414

தில் நெருக்கமாக வாயகன்றதோர் ஊதுகுழலைப் பொருத்த வேண்டும்.

வாட்சன்: ஆகட்டும் தலைவரே! இதனைக்கொண்டு மேலெல் செய்ய வேண்டியதையும் கூறிவிடலாமே!

பெல்: சவ்வின் மறுபுறமுள்ள ஊதுகுழலுள் நீ உரக்கப் பேச வேண்டும். உனது குரல் ஒலிக்குத் தக்கவாறு இந்தச் சவ்வு அதிரும். இந்த அதிர்வை இதனுடன் பொருத்தப் பட்டுள்ள ஊசி புகைக் கண்ணுடியில் அதிர்ந்து பதிப்பிக் கும்.

வாட்சன்: இதனுல்....

பெல்: கூரிய கட்புலன் பெற்றுள்ள இந்த மங்கைக்கு ஒலி யின் வடிவத்தைப் புகைக்கண்ணுடியில் படியுமாறு ஒளிவடிவமாக மாற்றித் தருகிறேம். கண்ணுடியில் பதிந்துள்ள கோடுகள் இத்தகைய ஒலிமுறைக் குரி யன என்று செய்கை முறை இவளுக்கு விளக்க வேண் டும். இவ்வாருகப் பல பாடங்கள் நடத்தி முதலில் பேசவாவது செய்விக்கலாம். இம்முறை ஒலிக்காட்சிமுறை யெனப்படும்.

வாட்சன்: ஐந்து நிமையங்களுள்கருவியை அமைத்துக்கொண்டு வருகிறேன், தலைவரே! இந் நங்கை செய்ய வேண்டிய வற்றையெல்லாம் அதற்குள் செய்கையால் விளக்கி விடுகிறீர்களா?

பெல்: ஆகட்டும்.

(வாட்சன் செல்லக் காட்சி முடிவுறுகிறது)

காட்சி-4

இடம்: பெல்லின் ஆய்வகம்.

உள்ளோர்: பெல், வாட்சன்.

காலம்: தி. பி. 1904 நளித்திங்களில் (1873 நவம்பரில்) ஒருநாள் மாலை.

வாட்சன்: தலைவரே! ஆண்டுகள் இரண்டாகியும் நாம் இன்னும் வெற்றியுறவில்லையே!

www.thamizham.net - Free E book No 7414

பெல்: என்ன செய்வது வாட்சன்! மேபெல் யாவரையும் போல் கேட்க முடியாவிட்டாலும் நாம் பேசுவதை அவள் புரிந்து கொள்வதற்காக ஒரு கருவியாவது செய்யலாம் என்ற எண்ணத்தில் கடந்த ஈராண்டுகளாக உலகில் வெளி வந்த மின்சாரம் பற்றிய பொத்தகங்கள் அனைத்தையும் படித்து முடித்தேன்.

வாட்சன்: அதுமட்டுமன்றி ஆயிரக்கணக்கான ஆய்வு முறை களையும் விடாது செய்து பார்த்தோம்: மேபெல்லின் அப்பாவும் தொடர்ந்து தயங்காது பொருளுதவி செய்து வருகிறார்.

பெல்: அதுதான் என் உள்ளத்தையும் வாட்டுகிறது; வாட்சன், அவருக்கு நாம் இன்னும் மன அமைதியைத் தேடிக் கொடுக்க முடியவில்லையே!

வாட்சன்: தாங்கள் மேபெல்லைப் பேசுமாறும் கேட்குமாறும் செய்வீர்களென உறுதியாக நம்புகிறார். எனவே மன வமைதியுடனேயே இருக்கிறார்.

பெல்: என்ன துன்பப்பட்டாயினும் மேபெல் நாம் பேசுவதைக் கேட்டுப் புரியுமாறும் அவளாகவே பேசுமாறும் செய் வேன்.

வாட்சன்: மேபெல்லுள்ளே பெல் அடங்கிய பின்பு இஃதென்ன நடக்காத செயலா? அது சரி... எடின்பரோ பல் கலைக் கழகத்தில் தாங்கள் கண்ட தொலையொலிப்பான் என்னும் கருவியைப் பற்றி இன்று கூறுவதாகக் கூறினீர்களே!

பெல்: ஆமாம், ஆமாம்! மறந்தே விட்டேன்! பிலிப்பு ரீ என்னும் செருமானிய ஆசிரியர் சில மின் சுற்று முறைகளால் ஒரி டத்தில் பாடும் பாட்டு, பிறிதோரிடத்திலுள்ள ஊசி யொன்றை அதிர்த்து ஒலிப்பிக்கும் கருவியை அமைத் திருந்தார். இதுவே தொலையொலிப்பான் என்பதாகும். என் கருத்தைக் கவர்ந்த சிறந்த கருவியிது.

வாட்சன்: இந்த முறையிலேயே நாம் ஏன் முயலக்கூடாது?

www.thamizham.net - Free E book No 7414

பெல்: ஆமாம். இனிமேல் பிறமுறைகளில் நேரத்தைச் செலவிடு வதை நிறுத்தி விடலாம். இக்கருவி என் உள்ளத்தில் எழுப்பிய எண்ணம், ஒருவர் ஓரிடத்தில் பேசுவதை ஏன் மற்றொருவர் பிறிதோரிடத்திலிருந்து கேட்க இயலாது என்பதே! இக்கருத்தைப் பிறர் எள்ளி நகையாடுவார்களோ என்று நினைத்தே இதுவரை எவரிடமும் கூற வில்லை. அன்பர் அப்பர்டுவிடம்கூடக் கூறவில்லை!

வாட்சன்: தங்கள் உள்ளத்தில் தோன்றிய கருவிகள், வேண்டிய பிற துணைக்கருவிகள் ஆகியவற்றின் வரைபடத்தைக் கொடுங்கள். இரு நாட்களுள் ஆயத்தமாக வைக்கிறேன்..

பெல்: ஆகட்டும். நீ சென்று உண்டு திரும்பிவா.

(வாட்சன் செல்ல, காட்சி முடிவு)

காட்சி 5

இடம். பெல்லின் ஆய்வகத்தில், அடுத்துள்ள இரு அறைகள்.

உள்ளோர்: வாட்சன், பெல்.

காலம்: தி பி. 1906, விடைத்திங்கள் 19-ஆம் நாள் (2-6-1875) முற்பகல்.

[கவரம் (காந்தம்) ஒன்றுக்கு நெருக்கமாகத் தகடு ஒன்றுள்ள இரு கருவிகள் மின்சுற்றுல் இணைக்கப்பட்டுள்ளன. ஒரு கருவி உள்ள அறையில் வாட்சனும் பிறிதொரு கருவி உள்ள அறையில் பெல்லும் உள்ளனர். கருவிகளை இயக்கியவாறே உரத்த குரலில் உரையாடுகின்றனர்.]

வாட்சன்: (உரத்த குரலில்) தலைவரே! தகடு கவரத்துடன் மறுபடியும் ஒட்டிக்கொண்டது சற்றுநேரம் பொறுங்கள்.

பெல்: (உ. குரலில்) மின்சுற்றைத் துண்டித்துவிட்டுத்தகட்டை எடு. அப்போதுதான் தகட்டை எளிதிற் பிரிக்கலாம்.

வாட்சன்: (உ. குரலில்) தகட்டை எடுத்துவிட்டேன், தலைவரே! கவரத்துக்கு மிக நெருக்கமாகத் தகட்டை இருத்த இயலவில்லை. நெருங்கியவுடன் பட்டென்று ஒட்டிக் கொள்கிறதே!

www.thamizham.net - Free E book No 7414

பெல்: (தம்முடைய தகடு அதிர்வதைப் பார்த்து உரத்த குரலில்) மின்சுற்றைத் துண்டிக்காமல் தகட்டை எடுக்க ஏன் முயற்சி செய்கிறாய்?

வாட்சன்: (உ. குரலில்) மின்சுற்றை அப்போதே துண்டித்து விட்டேன் தலைவரே!

பெல்: (தணிந்தகுரலில்) என்ன? இருந்தும் என் கருவியின் தகடு அதிர்கிறதே! ஆம்... அப்படித்தான் இருக்கவேண்டும். அதேதான். (மீண்டும் உரத்த குரலில்) வாட்சன்! இப்போது நான் சொல்லுகிறபடி செய்.

வாட்சன்: (உ. குரலில்) அப்படியே தலைவரே!

பெல்: (உ. குரலில்) கவரத்தருகில் தகட்டைக் கொண்டு செல். அஃது ஈர்ப்புத்திறனால் ஒட்டியவுடன் தகட்டைப் பிரி. மறுபடியும் ஒட்டவைத்தும் பிரித்துக்கொண்டும் இரு.

[வாட்சன் தகட்டை ஒட்டவைத்தும் பிரித்துக்கொண்டுமிருக்கிறார். சப்...டப்...சப்...டப்... சப்...டப்! அடுத்த அறையில் பெல்லின் முன்னுள்ள கருவியில் தகடு மிக மென்மையாக அதிர்கிறது. சப்... டப்... சப்... டப்... சப்...டப்...]

பெல்: வாட்சன்... இப்பொழுது நான் கவரத்தின் முன்னுள்ள தகட்டைப் பிரிக்கவும், ஒட்டவைக்கவும் செய்கிறேன். உன் கவரத்தின் முன்னுள்ள தகட்டின் செயலைக் கவனி. மின் சுற்றை இணைக்க வேண்டா.

(சப்... டப்... சப்... டப்... சப்... டப்... என ஒலியெழல்)

பெல்: சரி, நீ இங்கே வா.

வாட்சன்: (வந்துகொண்டே) தலைவரே! மின்சாரத்தொடர்பில்லாமலேயே தகடு அதிர்ந்து ஒலியெழுப்புகிறதே! இஃதெவ்வாறு?

பெல்: நான் தகட்டை அதிர்வித்த எந்திர ஆற்றல் அதிர்வுகள் கவர மின்னாற்றலாக மாற்றப்பட்டுக் கம்பிகள் வழியாகச் சென்று உன் கருவியிலுள்ள தகட்டை அதிர்விக்கின்றன எனக் கருதுகிறேன். இதற்கு மின்சாரமும் தேவையில்லையன்றோ?

www.thamizham.net - Free E book No 7414

வாட்சன்: இதினின்றும் தாங்கள் எண்ணும் கருவியின் தன்மையை என்னவென்று கூறுகிறீர்களா?

பெல்: ஓரிடத்தில் ஒருவர் பேசுவதைப் பிறிதோரிடத்தில் மற்றொருவர் கேட்க இயலும் கருவியை விரைவில் அமைத்துவிடலாம். மின்சுற்றின் ஒருமுனையில் இணைக்கப்பட்ட கவரத்தின் எதிரேயுள்ள தகட்டை, நாம் பேசும் ஒலியதிர்வுகளால் அதிர்வுறுத்தினால், இவ்வதிர்வுகள் மின்கவர அதிர்வுகளாகிக் கம்பிகள் மூலம் மறுமுனையை அடையும். மறுமுனையில் இம் மின் கவர அதிர்வுகள் கவரத்தின் எதிரேயுள்ள தகட்டை ஈர்ப்பு வேறுபாட்டுடன் அதிர்வுறுத்தும். இவ்வெந்திர அதிர்வுகள் ஒலியதிர்வுகளாகி நம் செவிக்குப் புலனாகக் கூடுமல்லவா!

வாட்சன்: ஆமாம், ஆமாம்! இத்தகையதொரு கருவி புரட்சியொன்றையே உருவாக்கக் கூடியது தலைவரே!

பெல்: நீ கூறுவது முற்றிலும் மெய்ம்மையே. இனி நம் பணியின் விரைவு பெருகும். தொலைப்பேச்சைக் கேட்கும் கருவியைச் செய்து முடிக்கும் வரை நமக்கு ஓய்வே கிடையாது. இரண்டாண்டுகளுக்கு மேலாக மின்சார விளைவுகளைப் பற்றிப் படித்தவையும், பல்வகையான ஆய்வுகளும் வீணாகவில்லை. சரி. வாட்சன்! நீ வீட்டுக்குச் சென்று ஓய்வெடுத்துக்கொள்.

(வாட்சன் செல்லக் காட்சி முடிகிறது)

(தொடரும்)

தென்மொழி-கடலூர்-I.

[உலகத் தமிழ்க்கழகச் செய்திகள் முழுமையாகத் தொடர்ந்து வரும் ஒரே இதழ்]

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50 உருபா.	13 உருபா.
தனிஇதழ்:	75 காசு.	90 காசு.	1 உருபா.

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு ஓர் உருபா 50காசு முன்பணம் கட்டக் கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7414

மருத்துவம்;

இளமை உணர்வூட்டும் இனிய சுனைநீர்.

அ. பொன்னம்பலம்.

வியத்தகு தன்மைகள் பெற்ற ஒருவகையான தனித்தன்மை பெற்ற சுனைநீரை ஆடவர்கள் பருகினால், முதுமையின் காரணமாக இழந்த ஆண்மையை மீண்டும் பெறுவதோடு இளமை உணர்வோடு பல ஆண்டுக் காலம் வாழலாம் என்று யாராவது விளம்பினால் திண்ணமாக நீங்கள் இஃது அறிவியலுக்குப் பொருந்தாக் கற்பனைக்கதை என்றேதான் எண்ணுவீர்கள். ஆனால் அண்மையில் சுனைநீருக்கும் இளமை உணர்வூட்டும் அரிய ஆற்றல் உண்டு என்று கண்டுள்ளனர். இதுபற்றிச் சிலசுவையான உண்மைகளை ஈண்டுக்காணுவோம்.

வியத்தகு சுனை:

யூகோசுசுலேவியா நாட்டில் "பைன்" மரங்கள் அடங்கிய எழில் கொழிக்கும் "கொஞ்சு" மலைத்தொடரில், கிளான்டாஞ்சு என்ற சிற்றூரிலிருந்து 10 கல் தொலைவிலுள்ள இடத்தில் வியப்பான சுனை ஒன்று உள்ளது; இந்தச்சுனைநீர் எங்கிருந்து சுரந்து வருகின்றது என்பது இன்னும் கண்டுகொள்ள இயலாப் புதிராக இருக்கின்றது. வியத்தகு ஆற்றல் படைத்த இந்தச் சுனைநீரின் ஒப்பற்ற தன்மைகளை ஆங்கு வாழ்ந்த மக்கள் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே அறிந்திருந்தனர். 15-ஆம் நூற்றாண்டில் துருக்கியை ஆண்ட மன்னன், இந்தச்சுனைக்கு அருகே அழகிய அரண்மனை ஒன்றை எழுப்பி, எண்ணற்ற விலைமகளிருடன் இங்கே இன்பவாழ்வு வாழ்ந்தானாம்; அதன் காரணமாகத்தான் இந்தச் சுனைநீரை, மன்னனின் பெயரை நினைவூட்டும் முறையில் ஆங்கு வாழும் மக்கள் "பாட்சா நீர்" என அழைக்கின்றனர். இத்தகைய இனிய சுனைநீரைப் பருகித் துருக்கிய மன்னன் இளமை உணர்வைப் பெற்றிருக்க வேண்டுமென இன்றைய ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். இந்தச்சுனையைச்சுற்றி வாழ்ந்த அந்த நாட்டு மக்கள் இந்த இனிய சுனைநீரை மற்றவர்களுக்குத் தெரியாமல் பருகி இளமை உணர்வைப் பெற்றுவந்தனராம். இடைக்காலத்தில் பல நூற்றாண்டுவரை, இந்தச்சுனை இருக்குமிடம் எப்படியோ மக்களின் பார்வையினின்று மறைந்து விட்டது. 1921-ஆம் ஆண்டிற்குப் பின்னர்தான் இந்தச்சுனை இருக்குமிடம் மீண்டும் தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டது. 1921-ஆம் ஆண்டு ஆசுதிரியாவைச் சார்ந்த பொறியியல் வல்லுநர்கள் "கொஞ்சு" மலைத்தொடரின் பல பகுதிகளைப்பற்றி விளக்கமாக ஆராய்ந்து கொண்டிருந்த பொழுது, இவர்களுக்கு வழிகாட்டியாகப் பணிபுரிந்த இப்ரோ கிரிகிச் என்ற முதியவரின் முயற்சியால் கண்டு பிடிக்கப்பட்டது.

www.thamizham.net - Free E book No 7414

ஆண்மை தரும்நீர்:

இம் மலைப்பகுதியில் வாழும் மக்கள் இங்குள்ள சுனை சுரக்கும் இனிய நீரை "ஆண்மை தரும் நீர்" என்று பொருள்படத் தங்கள் மொழியில் "மசுகா வோடா" (Muska Voda) என அழைக்கின்றனர். இங்குள்ள சிற்றூர் மக்கள் பொதுவாக இந்த நீரைப் பருகினால் குடும்பத்தில் அமைதியைத் தோற்றுவிக்கின்றது என எண்ணுகின்றனர் இந்நீரைப் பருகிய ஆடவர்கள் முதுமையின் காரணமாகத் தாங்கள் இழந்த ஆண்மைத்தன்மையையும், இளமை உணர்வையும் மீண்டும் பெறுகின்றனர் எனக் கூறுகின்றனர். சிற்றூர்ப்புறங்களில் உள்ள மகளிரும், இந்நீரைப் பருகுவதால் செரிப்பின்மை, கல்லீரல் தொல்லைகள், குருதிமிகு அழுத்தநோய் (High Blood Pressure) உறக்கமின்மை (Insomnia), நரம்புத் தொல்லைகள் போன்ற சிக்கல்களினின்று விடுதலை பெறுகின்றனர், பல ஆண்டுக்காலமாக இப்பகுதியில் வாழும் முதியவர்கள் இந்நீரை மற்றவர்களுக்குத் தெரியாமல் மறைவாகவே பருகிவந்துள்ளனர்; ஆனால் இந்த இனிய சுனைநீரின் ஒப்பற்ற தன்மைகள் உலகெங்கும் பரவியதும் இந்நீரைப் பருகுவதைப் புதினமாகவே கருதுகின்றனர்.

எண்ணற்ற மடல்கள்:

ஒப்பற்ற தன்மைபெற்ற இந்தச் சுனைநீரை வணிகப் பொருளாக்கிப் பெரும்பணம் ஈட்டவேண்டுமென்ற நோக்குடன் உலக வணிகர்கள் பெருமுயற்சி புரிந்து வருகின்றனர். இந்நீரை உலகெங்கும் விற்க முழு உரிமையை வேண்டி உலகிலுள்ள வணிகர்களிடமிருந்து அன்றாடம் எண்ணற்ற மடல்கள் இங்குக் குவிந்து கொண்டே இருக்கின்றனவாம். டெக்டாசு நகரைச் சார்ந்த வணிகக் குழுவானது, இந்நீரை விற்கும் முழு உரிமையைத் தனக்கு அளிக்க வேண்டு கோள் விடுத்துள்ளது. இதுபோலவே மிச்சிகன் நகரிலுள்ள வணிகர் ஒருவர் இந்தச் சுனைக்கு அருகில், இந்த நீரைக் குப்பிகளில் அடைத்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காகத் தொழிற்சாலை ஒன்றைக் கட்டும் உரிமையைக் கேட்டுள்ளார். போலக்குவைச் சார்ந்த மருத்துவர் எழுதிய மடலில் "இயற்கையான தன்மைகளைப்பெற்ற இந்த இனிய நீரிற்கு இத்தாலியில் நல்ல வரவேற்பு இருக்கின்றது; எனவே இத்தாலியில் இந்நீரை விற்க முழு உரிமையை எனக்கு அளிக்கவேண்டும்" எனக்கேட்டுள்ளார். கான்சாசு நகரத்தைச் சார்ந்த பெரும் வணிகர் ஒருவர் "இந்நீரில் அடங்கியிருக்கும் மூலகப் பொருள்களைமட்டும் எனக்கு அனுப்பினால்

www.thamizham.net - Free E book No 7414

போதும்; இந்த மூலகப் பொருள்களுடன் நீர்கலந்து நான் விற்பனை செய்து கொள்கிறேன்” என வேண்டியுள்ளார். மடல்கள் மட்டுமல்லாமல், கம்பிச் செய்திகளின் மூலமாக அன்றுடம் நிறைய வேண்டுகோள்கள் குவிந்துகொண்டு இருக்கின்றனவாம். கோசுடாரிக்காவிலிருந்து உடனடியாக 1000 குடுவை (Gallon) நீர் வேண்டிக் கம்பிச் செய்தி வந்துள்ளது. மெக்சிகோ நகரில் வாழும் இத்தாலிய நாட்டவன் கீழ்க் கண்ட உருக்கமான மடலை எழுதியுள்ளான், “முதுமையின் முரட்டுப் பிடியிற் சிக்குண்டு தொல்லையுறும் என்னுடைய தாயைக்காக்க உடனடியாக எனக்கு 10 பதினெடை நீர் தேவை; இந்நீரின் விலையைப்பற்றிக் கவலையில்லை”. கிழக்கு செர்மனியைச் சார்ந்த எழுத்தாளர் ஒருவர்கூட முதுமை காரணமாக இழந்துபட்ட இளமை உணர்வை மீண்டும் பெறத் தமக்கு இந்நீர் தேவையென எழுதியுள்ளார். சுட்காார்ட் நகரைச் சார்ந்த முதியவர் கீழ்க்காணும் முடங்கலை வரைந்துள்ளனர். “என்னைவிட 40 அகவை குறைவாக உள்ள என்னுடைய இளம் மனைவியின் இன்ப வேட்கையைத் தணிக்க உடனடியாக இந்தச் சுனை நீர் தேவை”. இவைமட்டுமல்லாமல் பவாரியன் நகரைச் சார்ந்த முதுமை எதிர்ப்புப் போராட்டக் குழுவானது (Association For Struggle Against Old Age) தன் உறுப்பினர்களுக்கு 2,100,000 பதின அளவுள்ள நீர் தேவை என்று வேண்டுகோள் விடுத்ததோடு அல்லாமல், வரும் கோடைக் காலத்தில் அதன் உறுப்பினர்கள் வந்து தங்குவதற்காகக் கிளான்டாஞ்சு சுற்றுப்புறத்திலுள்ள தங்கும் விடுதிகள் அனைத்தையும் சுற்றிவளைத்து முன்னேற்பாடுகள் செய்து கொண்டது. சுவிசு நாட்டைச் சார்ந்த செய்தியாளர் கீழ்க்கண்டவாறு தம்முடைய உள்ள வேட்கையை முடங்கல் வடிவில் எழுதியுள்ளார்: “நான் மிகவும் களைப்படைந்துள்ளேன்; என்னுடைய இல்லக்கிழத்தி என்னைவிட 12 அகவை குறைந்தவளாக இருக்கின்றுள். இந்த அரிய நீரின் விலை எவ்வளவு இருந்தாலும் தாழ்வில்லை; எனக்கு உடனடியாகத் தேவை”.

இவ்வாறு நாள்தோறும் எண்ணற்ற மடல்கள் இவ்வூராட்சிக் குழுவினருக்கு வந்து குவிந்து கொண்டிருக்கின்றன; இவ்வளவு மடல்கள் வந்து குவிந்தும், இவர்களுடைய வேண்டுகோளை நிறைவேற்ற இயலாத நிலையில் உள்ளனர். ஆனாலும் இவர்கள் அடுத்த சூன் திங்களிலிருந்து இந்த நீரைக் கலங்களில் அடைத்து விற்பனைப் பொரு

www.thamizham.net - Free E book No 7414

ளாக்க முயன்று வருகின்றனர்; அதுவரை இந்நீரை அடைய ஒரே ஒரு வழி இச்சுனைக்கு நேரிடையாகச் சென்று நீரைப் பருகுவதுதான்.

முதியவர்களின் படையெடுப்பு:

விடுமுறை நாட்களில் யூகோசுலோவியா நாட்டின் பல பகுதிகளினின்று மட்டுமல்லாமல் ஆசுத்திரியா, மேற்கு செருமனி போன்ற நாடுகளினின்றும் எண்ணற்ற வழிபோக்கர்கள் இந்தச் சுனைக்கு வந்துகொண்டே இருக்கின்றனராம் அண்மையில் சப்பான் நாட்டிலிருந்துகூட மணமக்கள் இச்சுனைக்கு வந்து இனிய நீரைப்பருகி மகிழ்ந்தனராம். இச் சுனைக்கு வருபவர்களில் பெரும்பான்மையோர் நடுத்தர அகவையினரும், முதியவரும் ஆவர். இளைஞர்களும் தங்களுக்குப் பிற்காலத்தில் ஏற்படும் முதுமையைத் தடுக்கும் பொருட்டு, இந்த இனிய நீரைப்பருகுகின்றனராம். கோடைக்காலத்தில் இச்சுனையின் சுரப்பு அளவு மிகவும் குறைந்துவிடுவதால், இந்நீரைப் பருக வருகின்றவர்கள் ஏறத்தாழ 5 முதல் 6-மணி நேரம்வரை கால்கடுக்க வரிசையில் நின்று பின்னர் பருகுகின்றனராம். இளவேனிற் காலத்தில் இச்சுனையின் சுரப்பு அளவானது மணிக்கு 12 பதின அளவில் பெருகக் கூடுமெனக் கண்டுள்ளனர். முதுமையின் காரணமாக, இச்சுனை இருக்கும் மலைச்சரிவான இடத்திற்குச் செல்ல இயலாத வழிப்போக்கர்களுக்குச், இச் சுனை நீரைக் கொண்டுவந்து கொடுத்து இவ்வூர் மக்களில் ஒருசிலர் கூலியைப் பெற்றுத் தங்கள் வாழ்க்கையை நடத்துகின்றனர். இச்சுனையை நன்கு பாதுகாக்கும் பொருட்டு, அண்மையில் இவ்வூராட்சிக் குழுவினர், இச்சுனையைச் சுற்றி நெடிய முள்வேலி ஒன்றை அமைத்ததோடு அல்லாமல், இரவும் பகலும் இச்சுனையைக் காக்க இரண்டு காவலர்களையும் ஏற்படுத்தியுள்ளனர். தற்பொழுது இச்சுனை நீரின் சுரப்பு அளவு குறைந்து விட்டதால், இங்கு வரும் வழிப்போக்கர்களுக்கு, தாங்கள் வேண்டிய அளவு நீரைப் பருகிய பின்னர் ஒரே ஒரு பதின அளவுள்ள நீரைத்தான் வெளியே கொண்டு செல்லலாம் எனக் கட்டுப்பாடு செய்துள்ளனர். இவ்வூராட்சிக் குழுவினர் இந்நீரைத்தொடக்க நிலையில் 1 பதினம் 8 செண்டுகள் என்ற விலையில் விற்பனை செய்து வந்தனர்; ஆனால் இவ்வூரிலுள்ள மக்கள் இங்கு வரும் போக்கர்களுக்குக் கள்ளச்சந்தையில் 1 பதினநீர் 80 செண்டுகள் என்று (அஃதாவது ஒருபதின மதுவின் விலையைப் போல் ஏறத்தாழ மூன்று மடங்கு, விற்கத் தொடங்கியதும், இவ்வூராட்சிக்குழுவினர் இந்நீர் விற்பனையை நிறுத்திவிட்டனர்.; ஆனாலும்

www.thamizham.net - Free E book No 7414

இவர்கள் இந்நீரைச்சுனையினின்று குழாய்களின் மூலமாகக்கொண்டு வந்து, தொழிற்சாலையில் கலங்களில் நிரப்பிப் பல இடங்களுக்கு அனுப்ப முயன்று வருகின்றனர்.

மருத்துவ ஆய்வுகள்:

துசுலா தொழில்நுட்பக்கூடத்தைச் சார்ந்த பேராசிரியர் சுலாட்டா (Professor Zlata) என்பவர் இந்தச் சுனைநீரின் தன்மைகளை வேதியல் முறைப்படி ஆராய்ந்துள்ளார். (Chemical Analysis) இந் நீரானது பொதுவான குடிநீரைப்போன்ற தன்மைகள் பெற்றிருப்பதோடு அல்லாமல் இது சுண்ணம் (Calcium), வெளிமம் (Magnecium) நேட்ரியம் (Natrium), இரும்பு (Iron), அலுமினியம் (Aluminium), செம்பு (Copper), பாரியம் (Barium), வெளியம் (Nickel), சுராண்டியம் (Strontium) போன்ற மாழைகள் இருப்பதைக் கண்டுள்ளனர். இந்நீரின் சிறப்புத் தன்மைக்கு ஒரு காரணம், பொதுவான நீரைவிட இந்நீரானது சற்று மிகுந்த பசைத்தன்மையைப் பெற்றிருப்பதோடு அல்லாமல், கரியிருதீயதையின் (Carbon-dioxide) அளவானது, இந்நீரில், பொதுவான நீரைவிடக் குறைவாக உள்ளது. மேலும் இந்நீரில்பொதிந்துள்ள பாரியம், வெளியம், சுராண்டியம் (Strontium) போன்ற மாழைகளைப் பொதுவான நீரில் காண இயலாது. இந்நீரில் பொதிந்துள்ள சுராண்டியத்திற்குக் கதிர் இயக்க ஆற்றல் (Radio-Activity) உண்டா என்பதுபற்றி விரிவானஆய்வு நிகழ்த்தி வருகின்றனர். இந்நீரை நுண்ணுயிர் ஆய்வு முறையிலும் (Bacteriological Test) ஆய்வு செய்துள்ளனர்.

இந்நீர் எவ்வாறு இளமை உணர்வை ஊட்டுகின்றது என்பது பற்றி ஆராய முயன்று வருகின்றனர்; இதுபற்றி விரிவான ஆய்வு நிகழ்த்தவேண்டு மாகையால், பல ஆண்டுகள் ஆகக்கூடுமெனக் கண்டுள்ளனர். இந்த நீரைப் பருகியவர்களில் பெரும்பான்மையோர் ஒருநாளைக்கு 1 பதினம் மேனி இரு கிழமைகள் இந்நீரைப் பருகினுல் நல்ல பலனைத் தருகின்றது என்கின்றனர். இந்நீரிற்கு மருத்துவ அடிப்படையில் இளமை உணர்வை ஊட்டும் அடிப்படை இயல்புகள் இருக்கக் கூடுமெனப் பெரும்பான்மையோர் கருதுகின்றனர். இத்தகைய கருத்தை நிலைநாட்ட நீண்டகாலஆய்வு திண்ணமாகத் தேவை. மேலும் இந்நீரைக் கலங்களில் அடைத்துத் தொலைவான இடங்களுக்கு அனுப்பினுல், இதன் இயல்புகள் கெடாது இருக்குமாவென

www.thamizham.net - Free E book No 7414

ஆராய்ந்து வருகின்றனர். எனவே பசோனியன் பொதுநலத்துறை அமைச்சர் "இந்நீரின் மருத்துவத் தன்மைகளை நீண்டகால விரிவான ஆய்விற்குப் பின்னர்தான் நாம் கண்டுகொள்ள முடியும்; எனவே அதுவரை இந்நீரை மற்ற இடங்களுக்கு அனுப்பி விற்க முயற்சி செய்யும் திட்டங்களை நாம் கைவிட்டுவிடுவது நல்லது; ஏனென்றால் கலங்களில் அடைத்து மற்ற இடங்களுக்கு அனுப்புவதன் மூலமாக இந்நீரானது தன்னுடைய மருத்துவத் தன்மைகளை இழந்துவிடக் கூடும்" என்று கூறுகிறார்.

இச்சுனையின் இருப்பிடத்தை மீண்டும் கண்டுபிடித்த இப்ரோ கிரிசிச் என்னும்முதியவர் இந்நீரின் மருத்துவத் தன்மைகளைப்பற்றித் தம்முடைய பட்டறிவைக் கீழ்க்காணுமாறு கூறுகின்றார். "இச்சுனை கண்டுபிடிக்கப்பட்ட நாளிலிருந்து இரண்டு கிழமைகளுக்கு ஒருமுறை இச்சுனையினின்று 200 கலன் (பைண்ட்) நீரைக்கொண்டு வருவது வழக்கம். எனக்கு இப்பொழுது 68 அகவை ஆகின்றது. மேலும் எனக்கு 9 குழந்தைகள் உள்ளன. இளமையுணர்வு என்பது மாந்தனின் வாழ்க்கையில் போற்றத்தக்க உணர்வாகும். வெள்ளிப் பணத்தினுல்கூட இந்த உணர்வை அடைய இயலாது."

வரும் கோடைக்காலத்தில், உலகின் பல பகுதிகளிலுமுள்ளவர்களை ஈர்க்கும் பொருட்டு, இவ்வூராட்சிக் குழுவினர் பல்வகையான முன்னேற்பாடுகளை விரிவாகச் செய்து வருகின்றனர். வழிப்போக்கர்கள் உறையும் பொருட்டுப் புதியபுதிய தங்கும் விடுதிகளைக்கட்டி வருவதோடு அல்லாமல், இவ்வூரிலுள்ள இல்லங்களையும் தங்கும் விடுதிகளாக மாற்றி வருகின்றனர். செர்மானியர்கள், இவ்வூரிலுள்ள திரிஞ்சகா என்னும் தங்கும் விடுதியைத் தங்களுக்கென முன்னேற்பாடுகள் செய்துள்ளனர். வருவோர் கவனத்தைக் கவரும்பொருட்டு, சுனையினின்று மூன்று கல் தொலைவில், அவர்கள் தங்குவதற்காக ஏந்துமிக்க மாளிகை ஒன்றையும், பூத்துக்குலுங்கும் பூங்கா ஒன்றையும், நீச்சல்குளம் ஒன்றையும் எழுப்பி வருகின்றனர்.

இத்தகைய அரிய ஆற்றலைப் பெற்றுள்ள இனிய சுனைநீரிற்கு இயற்கையாகவே இளமைப்பொலிவை ஊட்டும் இயற்கைத்தன்மைகள் திண்ணமாக உள்ளனவா? மருத்துவ ஆய்வுகளின் மூலமாக இந்நீரின் ஒப்பற்ற தன்மையை நிலைநாட்ட இன்னும் பல ஆண்டுகள் ஆயினும், இந்நீரைப் பருகி இளமைப் பொலிவைப் பெற்ற எண்ணற்றவர்களின் பட்டறிவைக்கொண்டு கணக்கிடுங்கால், இந்நீரின் இளமையூட்டும் தன்மையைக் கற்பனைக்கூற்று என்று திண்ணமாக ஒதுக்கஇயலாது.

(குறிப்பு: 'LIFE' என்னும் ஆங்கில இதழில் வந்த 'Magic Spring' என்ற கட்டுரையைத் தழுவி எழுதப்பெற்றது)

www.thamizham.net - Free E book No 7414

பொதுமையுணர்வு

-பெருஞ்சித்திரன்

மாந்தன் தன்னல உணர்வினன், அவன் அறிவு, மனம், வாழ்க்கை யாவும் தன்னலத்தையே ஒட்டி நடையிடுவன. உண்பது, உடுப்பது, உறைவது என்னும் முத்தேவைகளும் மாந்தனைப் பிறப்பு முதல் இறப்பு வரையிலும் தனக்காகவே என்று எண்ணச் செய்கின் றன. தன் பசியை அடக்கிக்கொண்ட பின்னர்தான் அவன் பிறர் வயிற்றைப்பற்றி எண்ணுகின்றான். தான் உடுத்துக்கொண்ட பின் தான் அவன் பிறர் உடையைப்பற்றி எண்ணுகின்றான்; பிறர் உடை மைகளைப் பற்றி எண்ணுகின்றான். பொதுவில் மாந்தர் எல்லாரும் தமக்காகவே உயிர்வாழ்கின்றனர். இந்நிலை இவனுக்கு மட்டுமன்றி உயிரினங்கள் எல்லாவற்றிற்கும் பொதுவான ஓர் உந்துணர்வாகவே இருந்து வருகின்றது.

உயிர்த் தொடக்கக் காலத்தில் இத்தன்னலவுணர்வு மாந்தனிடத் தில் இன்னும் மிகுந்திருந்தது. அக்கால் அவன் விலங்குகளைப் போல வும், பறவைகளைப் போலவும் தனக்காகவே இயங்கினான்; போரிட் டான்; உண்டான்; உயிர்த்தான். நாளடைவில் அவன் போக்கு மாறி யது; அவன் எண்ணம் வளர்ந்தது; அவன் அறிவு சிறந்தோங்கியது. தான் உண்டு மிகுந்ததைத் தன் அண்டை அயலார்க்கும் கொடுத் தான். தன் அன்புக்குரியவர்களின் தேவைகளையும் தன் தேவைகளா கவே எண்ணினான். தனக்காக உழைத்து உண்பதைப் போலவே, பிறருக்காகவும் உழைத்தான்; பிறரையும் உண்பித்தான். அதில் ஓர் இன்பத்தையும் கண்டான். தன் பசி அடங்குவதில் உள்ள இன்பம் போலவே, பிறர் பசியை அடக்குவதிலும் ஓர் இன்பத்தைக் கண்டான். தன் பொருட்டாகவே அவன் பிறரையும் ஒட்டி வாழவேண்டியிருந்தது. தான் ஒருவன் உழைத்து உண்பதைவிடத் தன்னோடு சேர்ந்த பிறரும் உழைப்பதையும், உழைத்து ஈட்டியவற்றை எல்லாருடனும் தானும் சேர்ந்து உண்டு மகிழ்வதையும் பேரின்பமாகக் கண்டான். தன் நலி வில் பிறர் உதவியது இவனுக்கு ஆறுதலாக இருந்ததைப் போலவே, பிறர் நலிவில் இவன் உதவுவதும் இவனுக்கு ஆறுதலளித்தது. தான் தனியாக வாழ்வதைவிடப் பிறரொடு சேர்ந்து வாழ்வதே இவனுக்கு

* சேலம் நகரத் தமிழாசிரியர் கழகம் வெளியிட்டுள்ள திருவள்ளுவர் 2000 ஆண்டு விழா மலரினின்று எடுத்தது.

www.thamizham.net - Free E book No 7414

மகிழ்ச்சியாகவும், சிறந்ததாகவும் இருப்பதைக் கண்டான். தன் பொருட்டாகப் பிறர் வருந்துவது இவனுக்கு நலமென்று தோன்றிய பின், பிறர் பொருட்டாகத் தான் வருந்துவதும் இவனுக்கு நல மென்றே பட்டது. அதன்பின் இவனுக்குப் பொதுமை உணர்வு தலை யெடுத்தது.

தனக்குக் கிடைத்ததைத் தானும் உண்டு, பிறர்க்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்த இவன் உணர்வு வளர வளர, தான் உண்ணாமை லேயே தனக்குக் கிடைத்த முழுப்பொருளையும் பிறர்க்கே தத்துவிடுவ தில் பெருத்த மகிழ்ச்சியும் மனநிறைவும் இருப்பதைக் கண்டான். தனக்காக உழைப்பதைப் பார்க்கிலும் பிறர்க்காக உழைப்பதில் உள் ளம் பெருமகிழ்வெய்தியதைக் கண்டான். இவனால் பிறர் நலமெய்தி வாழ்வதையும் பிறர் இவனை வாழ்த்துவதையும் இவன் விரும்பி மேற் கொண்டான். பிறர்பொருட்டுத் தான் துயருற்று மடிவதிலும் இவ னுக்கு இன்பம் இருந்தது. இறுதியில் தனக்காகவே வாழ்வதினும், பிறருக்காக வாழ்வதே வாழ்க்கை என்று கொண்டான். அவ்வுணர் வைப் போற்றினான்; புகழ்ந்தான்; அத்தகைய மாந்தரை இவன் பாராட்டினான்; வணங்கினான்; தெய்வம் என வழிபட்டான். அத் தகையோர் வாழ்ந்த முறைகளை அறமென்றான்; நல்லாறு என்றான்; சான்றாண்மை என்றான். இவ்வுணர்வு பெருகப் பெருக இவன் விலங் கினின்றும், பறவைகளினின்றும் வேறுபட்டான்; மாறுபட்டான்; உயர்ந்தான். அன்று உயர்ந்தவன் இன்றுவரை தாழவேயில்லை. இடையிடையே சில தாழ்ச்சிகளும் சில வீழ்ச்சிகளும் இருந்தாலும் அறவுணர்வே மாந்தரின் தலைசிறந்த பேருணர்வு என்று தெளிந் தான். அவ்வுணர்வை இறையென்றான்; இறுதி என்றான். அவ்வுணர் வற்ற மாந்தனை இழிந்தோன் என்றான்; மாந்தரினும் கீழ் என்றான்; மக்களிற் போலி எனறான்; பதர் என்றான்.

பொதுவுணர்வு எல்லார்க்கும் இன்பம் பயக்க வல்லது; எல்லா ரையும் இணைத்து அணைத்துக் கட்டுவது இவ்வுடல் உறுப்புகளில் ஒன்று பழுதுறினும் பிற எல்லா உறுப்புகளும் துயருறுவதுபோல், மாந்த இனத்தில் ஒருவன் துயருறினும் பிறர் எல்லாரும் அவனுக் காக வருந்துவது இயற்கையாகக் கருதப்பட்டது. தனிமை துன்ப மென்றும், அன்பற்ற கொடுமை என்றும், பொதுமை இன்பமென்றும்

www.thamizham.net - Free E book No 7414

அன்புசேர் வளமை என்றும் உணரப்பெற்றது. இந்த அடிப்படையில் மாந்த இனத்தின் வரலாறே புதுப்பிக்கப்பெற்றது. மாந்த இனத்தின் முதலீடே பெருமைப்படுத்தப்பெற்றது.

'ஈதல் இன்பம்' எனப்பெற்றது; 'ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது ஊதியமில்லை உயிர்க்கு' என்று ஓதப்பெற்றது. 'அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க' என்று அறிவுறுத்தப் பெற்றது. 'அறத்தான் வருவதே இன்பம்; மற்றெல்லாம் புறத்த; புகழும் இல'-என்று வகுத்துரைக்கப் பெற்றது. "மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று" என்று தேரப்பெற்றது.

அறவுணர்வற்ற -ஈகையுணர்வில்லாத-பொதுமை நினைவற்ற புல்லியர் கடியப் பெற்றனர். "வைத்திழக்கும் வன்கணவர்"-என்று இகழப்பெற்றனர். "நடுவூரிற் பழுத்த நச்சுமரம்"-என்று பழிக்கப் பெற்றனர். "என்புதோல் போர்த்த உடம்பு"-என இழித்துரைக்கப் பெற்றனர். அவர் அறியாமை வெகுளப்பெற்று, 'ஓம்பா மடமை' என்றும், 'அவ்விய நெஞ்சம்' என்றும் கடிந்துரைக்கப் பெற்றது. அவர் ஆக்கம் 'நடுவிகந்த ஆக்கம்' என்று எள்ளப்பெற்றது.

மாந்தவினத்திற்கே உயர்வளிக்கும் இப் பொதுமையுணர்வு தமிழினம் கண்டெடுத்த முதல் உணர்வாகும். உலகின் கண் வேறெங்கும் தனிமையுணர்வின் வல்லாட்சியொன்றே தலைவிரித்தாடிய மிகமிகப் பழங்காலத்திலேயே, தமிழன் பொதுமை யுணர்வில் தலைசிறந்திருந்தான். மன்பதையின் மேம்பாடுபற்றியே அன்றைய தமிழன் எண்ணினான்; பேசினான்; செயல்பட்டான். உலகம் முழுவதும் அவன் அறவியலால் ஆள விரும்பினான். பொதுமையுணர்வொடும், பொதுவுடைமைக் கருத்தொடும் அரசாட்சி நிறுவிய முதல் மாந்தன் தமிழனே! இவன் அறவாணர்களையே தன் அமைச்சர்களாக வைத்துக்கொண்டான். அறவியலையே அரசியல் சட்டமாக்கினான்; கிரேக்க நாட்டில் பிளேட்டோவும் அரிசுடாட்டிலும் கருக்கொள்ளா முன்பே உலக முழுமைக்கும் பொருந்துவதான-மாந்த இனத்திற்கே பொதுவான அரசியல் அறமுறைகளை வகுத்தளித்தவன் தமிழன். அவன் செய்த நூல்கள் இதனை உணர்த்தும்; அவன் பாடிய பாடல்கள் இவ்வுண்மையை முழங்கும்; அவன் நாட்டிய ஆட்சி இதனை மெய்ப்பிக்கும். நெறி நூல்களுக்கெல்லாம் தலைபாயதான, அறநூல்களுக்கெல்லாம் வழிகாட்டிய

www.thamizham.net - Free E book No 7414

லான திருக்குறள் இதனை எண்பிக்கும். ஆசிரியனாலும், கருத்தாலும், இனத்தாலும் தனிமை கற்பிக்கப்பெறாத ஒரே ஒரு நூல் திருக்குறளாகும். உலகம் எங்கும் தேடினாலும் ஆசிரியப்பெயர், வரலாறு அறிவிக்கப்பெறாத இவ்வறநூல் போன்ற ஒன்றைக் காணமுடியாது

இன்றைய உலகம் பொதுவுடைமை உலகம். பொதுவுடைமை பேசப் பெறுகின்றது; பாராட்டப் பெறுகின்றது; விரும்பி மேற்கொள்ளப் பெறுகின்றது. இவ்வுணர்வு மேனாடுகளினின்றும் இங்கு இறக்குமதி செய்யப்பெற்றதுபோல் பாராட்டியுரைக்கப் பெறுகின்றது பிறருக்கு இக்கொள்கை புதியகொள்கை யாகலாம். தமிழர்க்கு இவ்வுணர்வு மிகப் பழையது; மிகமிகப் பழையது; கற்காலத்தது. தமிழனின் தொட்டிலில் உரைக்கப்பெற்ற தாலாட்டுக் கொள்கை இது. அறிவியலுணர்வால் மேனாட்டினரின் வயிற்றுள் தோன்றிய இக் கொள்கை, அறவியலுணர்வால் தமிழனின் மனத்துள் பன்னூறாயிரமாண்டுகளுக்கு முன்பே வளர்ந்தது. எந்தப் பொருளையும், பொருளின் பயனையும் தன்னளவாக, தன் இனத்தினளவாக, தன் நாட்டளவாகக் காணாமல் உலகத்தின் அளவாக வைத்துக் கண்ட முதல் மாந்தன் தமிழனே! ஈராயிரமாண்டுகளுக்கு முன் எழுந்த அறவியல் பயிற்றும் கதிராக ஒளி மிளிரும் திருக்குறளில் மட்டும் உலகம், உலகத்தார்க்கு, உலகத்துள் என உலகு முன்வைத்துப் பேசப்பெற்ற இடங்கள் ஐம்பத்தைந்து.

> "நீரின் றமையா யாக்கைக்கு எல்லாம்
> உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத் தோரே" —(புறம்18)

என்று பொதுமை பாடினான் தமிழன். 'எல்லார்க்கும் கொடுமதி'— என்று அறம் பயிற்றினான் தமிழன். 'சுவைக்கு இனிதாகிய குய்யுடை அடிசில் பிறர்க்கு ஈவுஇன்றித் தம் வயிறு அருந்தி' யுண்ணல் ஆகாது எனப் பொதுமை வித்தியவன் தமிழன். 'இரந்தோர் அற்றம் (துன்பம்) தீர்க்க என விரைந்த' முதல் இனம் தமிழினம். 'அமிழ்தம் இயைவதாயினும் இனிது எனத் தமியராய் உண்ணாத' தகையினர் தமிழர்.

ஆனால், இற்றையோ, தனிமை உணர்வு மிகுந்த பிற நாட்டினர் யாவரும் பொதுமை உணர்வு மிக்கவராய் மேம்பட்டு வருகையில், உலகிற்கே பொதுமை உணர்வு பயிற்றிய தமிழன், தனிமை உணர்வால் தகவிழந்து கிடக்கின்றான். தன்னல வுணர்வால் தறிகெட்டுச் சாகின்றான். வையகம் உய்ய அறம் விளக்கிய இவன், பொய்யகம் புலர மறங்கொண்டு இழிகின்றான். பண்டைப் புகழ் பாடிப்பாடி

www.thamizham.net - Free E book No 7414

இகழ் மிகுந்தோனாகத் தாழ்கின்றான். இவன் இத்தாழ்ச்சியினின்று மீட்சியுற்று உய்யும் நாள் ஒன்று வருமோ? இவன் பண்டைப்புகழ் மீண்டும் விளங்குமோ? தறிகெட்டுத் திரியும் இவனை நெறிப்படுத்தும் நிலை எத்துணை அரிது! எத்துணை இடர் செய்வது! அம்மகோ!

சோற்றுக்குப் பொய்யுரைத்து, அறங்கொன்று அங்காக்கும் இவன் மீண்டுய்யும் காலம் வருமோ? மலையேறி முகிலேறி வானேறி, வட்டமிடும் மதியிலேறி, அதன் குலையேறி மிதிக்கின்றார் மேனாட்டார்; இவனிங்கே, குறட்டைவிட்டுத் தலையேறி மிதித்தாலும் விழியாமல் உறங்குகின்றான்; தகவோ, சொல்வீர்? இவன் பற்றிய அறம் அறநூல்களில் உண்டு. இவன் புரிந்த மறம் புறநூல்களிலே உள்ளது. இவன் ஆண்ட திறம் இலக்கியங்களிலே மிளிர்கின்றது. இன்று, இவன் தனக்காக வாழும் நாயினும் கேடானான்; பூனையினும் இழிந்தான், தன் இனத்தையே கட்டியழிக்கும் கோடரிக்காம்பானான் பொதுமை பொதுமை எனப் பேசினும் பேசுவான். புறங்கடையில் அதுபொய் அதுபொய் என எண்ணி அங்காப்பான்; தனை விற்பான். இன்று இவன் காசுக்கு அடிமை; கருத்துக்கு வல்லடிமை; வீசுகின்ற சோற்றுக்கு வீழ்கின்ற கொத்தடிமை.

இவற்றிற்குக் காரணங்கள் எவை? தமிழன் பொதுமை உணர் விழந்தான்; தனிமை கருதினான்; தன்னலம் பற்றினான்; தன்னை அடிமையாக்கிக் கொண்டான்; தன்னுணர்விழந்தான்; தன் இனம் மறந்தான்; இனத்தின் நலம் மறந்தான்; மொழிமறந்தான்; மொழியின் கருத்தை அறவே மறந்துவிட்டான், இழுக்கல் புடையுழி உதவும் ஊற்றுக்கோல் அற்று, விழுப்பம் இழந்து, மழுக்கலுற்றுக்கிடக்கும் இவனைத் தூக்கி நிறுத்த ஒல்லுமோ? காலமே நீ விடை சொல்!

தென்மொழி அன்பர்களுக்கு

1. உறுப்பினர்கள் மடல் எழுதும்பொழுதும், பணவிடை அனுப்பும் பொழுதும் தங்கள் உறுப்பினர் எண்ணைத் தெளிவாகக் குறித்தல் வேண்டும். பணவிடை வாயிலாக விடுக்கப்பெறும் தொகைக்கு உரிய விளக்கத்தையும், முகவரியையும் பணவிடைக் கிழிப்பத்தில் வரைதல் வேண்டும். முகவரி மாற்றங்கள் உடனுக்குடன் அலுவலகத்திற்கு அறிவிக்கப் படுதல் வேண்டும்.

2. கட்டுரையாளர்கள், தாளின் ஒரு பக்கத்தில் மட்டும் தெளிவாக எழுதுதல் வேண்டும். தென்மொழிக்குத் தங்கள் கட்டுரைகள். பாடல்கள் போன்றவற்றை அனுப்புவதற்கு முன் நன்கு படித்துப் பார்த்து எழுத்துப்பிழை, சொற்பிழை, தொடர்ப்பிழை போல்வன இருப்பின் செப்பம் செய்து விடுத்தல் நன்று.

www.thamizham.net - Free E book No 7414

விண்வெளிச் செலவு!

-ப. இரெ. வேங்கடாச்சாரி, இளங்கலை (வேதியியல்)

மாந்தன் மதியத்திற் சென்றிறங்கும் நாள் தொலைவிலில்லை. இதை மெய்ப்பிக்கும் வகையிலே அமெரிக்கரும், உருசியரும் விண்வெளி ஆய்வுகளைச் செய்துவருகின்றனர். விண்வெளிச் செலவு மேற்கொள்ளுதலிலுள்ள ஒரு சில அடிப்படைச் சிக்கல்களையும், உண்மைகளையும் விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

ஞாயிற்று மண்டிலத்தை (Solar System) முதன் முதலில் சிறிது நோக்குவோம். ஒன்பது பெரிய கோள்கள் (planets) கதிரவனைச் சுற்றி வருகின்றன. கதிரவனுக்கு மிக அருகிலுள்ளது அறிவன் (Mercury) என்ற விண்கோள். மிகுந்த தொலைவிலுள்ள விண்கோள் புளூடோ (Pluto) ஆகும். இவ்விரண்டு கோள்களுக்கும் இடைப்பட்ட வெறுமையான பரந்த வெளியில்தான் நம் விண்வெளிக்கூடுகள் (Rockets) செல்லவேண்டும். அதுவும் விண்வெளியில் சுற்றித்திரியும் சிறிய கோள்களை (Small planets or asteroids) விலக்கிக் கதிரவன் இழுப்பு விசையை மீறியோ, அல்லது அவ்விழுப்பு விசையைப் பயன்படுத்திக் கொண்டோ நாம் விண்வெளிச் செலவை மேற்கொள்ளல் வேண்டும். விண்வெளியில் செல்லவேண்டுமானால், இந்நிலவுலகத்தின் ஈர்ப்பு விசையை (Gravitational force) முதலில் வெற்றி கண்டுதான் செல்லமுடியும்.

எல்லாப் பொருள்களையும் நிலவுலகம் தன் மையத்தை நோக்கி ஈர்க்கிறது. இப்புடவிக்கேயன்றி, மற்ற எல்லாப் பொருள்களுக்கும் ஈர்க்கும் தன்மையுண்டு. இவ்விசை மிகச்சிறிய அளவில் (Infinitesimally Small) இருப்பதால், நாம் அதை உணர்வதில்லை. இவ்விசையில்லாவிடில் எல்லாப் பொருள்களும் விண்வெளியில் மிதக்கத் தொடங்கிவிடும். அதனால் இவ்விழுப்பு விசைதான் விண்வெளிச் செலவிற்குப் பெரிய முட்டுக்கட்டையாக உள்ளது.

காற்றின் தலையீடில்லாத ஓர் உயரமான இடத்திற்குச் செல்வதாக எண்ணிக் கொள்வோம். அந்த விடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட வேகத்தில் ஒரு விண்வெளிக் கூட்டைச் செலுத்துவோம். அக்கூடு மிகுந்த வளைவான ஒரு பாதையை மேற்கொண்டு, செலுத்தப்பட்ட இடத்திலிருந்து ஒரு குறிப்பிட்ட தொலைவில் மீண்டும் வந்து

www.thamizham.net - Free E book No 7414

விழுந்துவிடும். இப்பொழுது கூட்டிய வேகத்தை மிகுதிப் படுத்திக் கொண்டே செல்வோம். வளைவுப் பாதை மாறி மாறி நிலவுலகத்தின் மேற்பரப்போடு பொருந்திய வட்டப் பாதையில் விண்வெளிக் கூடு செல்லத் தொடங்கி விடும். இப்பொழுது மீண்டும் நிலவுலகத்திற்குத் திரும்பாமல் தொடர்ந்து நம் உலகத்தைச் சுற்றி வருகிறது. மதியத் தைப்போல், அதுவும் இப்பொழுது ஒரு கோள் – செயற்கைக்கோள். இவ்வாறு செலுத்தப்பட்ட இடத்திற்கு மீண்டும் வந்து விழாமல், உலகத்தைச் சுற்றும் வகையிலே செலுத்தப்படும் விண்வெளிக் கூட்டின் மிகக்குறைந்த வேகம் (Minimum Velocity) வட்டவேகம் (Circular Velocity) எனப்படும். வட்டவேகத்தில் செலுத்தப்படும் எப்பொருளும் ஏன் நிலத்திற்குத் திரும்பி வருவதில்லை என்பதைச் சிறிது காண்போம்.

ஒரு பொருள் நகரும்போது ஒரு குறிப்பிட்ட விசை (Centrifugal force) உண்டாகிறது. அவ்விசை மிக மிக, பொருளின் வேகமும் மிகுதியாகும். அப்பொருளின் வேகம், வட்டவேகத்தோடு சமமாகும் போது, மேலே குறிப்பிட்ட விசை புவி ஈர்ப்பு விசைக்குச் சமமாகிறது. அதனால் ஈர்ப்புவிசை மறைந்து விடுகிறது என்று பொருளன்று. இவ்விரண்டு விசைகளும் எதிர் எதிர்த்திசைகளில் செயல்பட்டுத் தம்முள் சமன் செய்துகொள்கின்றன. இப்பொழுது அந்தப் பொருள் விண்வெளியில் நிலையான வேகத்தோடு சுற்றிவரத் தொடங்குகிறது. புவி ஈர்ப்பு விசையே யன்றிக் கதிரவனின் இழுப்பு விசையையும் மீறித்தான் விண்வெளிக்கூடு செல்ல முடியும். ஆனால் எளிமை கருதிக் கதிரவனின் ஈர்ப்புவிசையை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

இத்தடைகளை யெல்லாம் மீறித்தான் விண்வெளிக்கூடு செலுத்தப்படுகிறது. அவ்வாறு செலுத்தப்படும் விண்வெளிக் கூட்டிலிருந்து மற்றொரு சிறிய கூடு பிரிந்து, விண்வெளியிலேயே இணைகின்றது; பிரிந்து நிலவுலகத்தைச் சுற்றி வந்து மீண்டும் இணைகின்றது என்ற அளவிற்கு இன்று வெற்றி கண்டுள்ளனர். இவ்வெற்றி ஒரு குறிப்பிட்ட நாட்டின் வெற்றி அன்று: நம் அனைவருடைய வெற்றி என்று நினைந்து உளம் மகிழ்வோமாக.

உறுப்பினர்கள் கவனிக்க.

உங்கள் "தென்மொழி" உறுப்பினர் கட்டணம் முடிவுபெற்றதும், உடனே உருபா 9/- விடுத்துப் புதுப்பித்துக்கொள்ள வேண்டுகிறோம்.

www.thamizham.net - Free E book No 7414

0 அன்புடையீர்? நம் உ. த. க. இயக்கமும், அதனைச் சார்ந்த அன்னைத்தமிழும் அருந்தமிழ்நாடும் செம்மாந்து சீர்பெற வேண்டு மெனில் தாங்கள் நடத்திவருகின்ற 'தென்மொழி' என்னும் இலக்கியச் சோலை நலமான வளம்பெற வேண்டும்...! 'என்னியக்கம்' என்ற கட்டுரையின்றித் 'தென்மொழி' வெளிவரின் நலம். தங்களுக்கு அறிவுரைகூறும் நோக்கு அன்று. இத் 'தென்மொழி' எனனும் சோலையில் உண்ட தமிழ்த்தேனின் சுவையையும், தகுசால் கனிச்சாற்றின் இனிமையையும் மாண்புடைய மாந்தன் எவனும் மறக்கவோ மறைக்கவோ இயலாது என்பது வெள்ளிடைமலை. இருப்பினும் ஏதோ சில குமுகாயச் சூழற்காகவும் தங்கள் தங்கள் வாழ்க்கை நோக்கங்களுக்காகவும் சிலர் தங்கள் மீதும் 'தென்மொழி மீதும் பொய்யுரையும், பொருந்தாக் காழ்ப்புணர்வும் கொண்டுள்ளனர் என்பது உண்மை. ஆனால் பொதுத் தொண்டில் ஈடுபடும் தங்களைப் போன்றவர்கள் இவற்றைப் பொருட்படுத்தாமல் ,வன்மையுள் வன்மை மடவார் பொறை'என்பதையும்.,அறிவெனப்படுவது பேதையர் சொல்நோன்றல்' என்பதையும் கருதிக் கருத்துக் குருடர் சிலர் உளறுகின்ற உளறலைச் செவிமடுக்காமல் அயராது தொண்டாற்றுவீர்களாக.

–புலவர். ந. அ. அண்ணாமலை, நத்தம், சோலையார்பேட்டை.

தென்மொழியில் 'நூருசிரியம்' தொடர்ந்து வராமை மனக்குறை வளிக்கிறது. 'பரல்பரந்து அரலைவாரி நுரைநுங்கி.. நல்லோர் போய செந்நெறி நயக்கும்' தங்களின் 'இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்' என்னும் பட்டறிவுக் குவியல் நெஞ்சத் தவிப்பை உண்டாக்குகின்றது. தியாகராயர் கல்லூரிப் பாட்டரங்கத் தலைமைப்பாவான 'எங்கும் நிறைந்த இறைவன் கழல் வாழ்த்தி' என்றபாடல் தங்களின் எழுத்து வன்மையை என்றும் பறைசாற்றி நிற்கும்!

–நா. இளமாறன், பெரும்பகல்லா, நீலமலை.

0 ஆசிரியப் பெரும! வணக்கம். தென்மொழியைத் தொடர்ந்து படித்துப் பயனடையும் பல்லோருள் யானும் ஒருவன். நான் படிக்கத் தொடங்கிய காலத்தில்," இவ்விதழ் ஆற்றிவரும் மொழிப்பணியை மட்டுமே என் நெஞ்சு உணரமுடிந்தது. ஆனால் இற்றைய நாள்வரை என் தொடர்ந்த தொடர்பின் விளைவாய் எனக்கேற்பட்ட பட்டறிவின் பயனைக் கூறுகிறேன். தென்மொழி ஓர் ஒப்புயர்வற்ற தமிழ்க் குமுகாயத்தைப் படைக்கும் ஓயாத் தொழிற்சாலை எந்த இதழ்களிலும்;கிடைக்காத ஒரு"மன நிறைவு–உயிரின்பம்–உள அமைதி தென்மொழியைப் படிப்பதால் கிடைக்கின்றது; மனம் பக்குவம் எய்துகின்றது. இற்றைப் போலி உலகின் போக்குக் கவர்ச்சியினின்றும் நாளுக்குநாள் உள்ள மீட்புத்திறன் வளர்கின்றது. இப்படி எத்தனை உள்ளங்கள் உங்கள் எழுத்தால் தூய்மையடைகின்றனவோ? 'என் இயக்கம் பற்றிய சில விளக்கங்கள்' ஓர் உயர்ந்த இலக்கியம்- நுண்மையான உணர்ச்சிகளுக்கிடையே என் உள்ளம் மூழ்கித் திளைத்து இன்பமெய்துகின்றது இப்பகுதியின் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வோர் உணர்ச்சி நரம்பு! இதுவரை இருப்பதாகவே உணரப்பட்டிராத மேலோங்கிய நுண்மையான உணர்வுத் துளிர்களை இப்பகுதியின் உங்கள் எழுத்துகள் சுண்டிவிட்டன. படிக்கப் படிக்க எழுத்துகள் மறைந்து?விடுகின்றன. அவ்விடங்களிலெல்லாம் உணர்வுக் குழம்பையே காண முடிகின்றது. இப்பகுதியை இதழ் தவறாது எழுதி வாருங்கள். எங்களுக்கு உணர்வுப் பசி! பசித்தவன் கேட்பதில் தவறில்லையே!–**கு.அய்யாவு, பழையசூரிபாளையம், கோபிவட்டம், கோவை.**

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

www.thamizham.net - Free E book No 7414

○ பெரும! தங்கள் பொதுவாழ்வையும் பொதுநல உணர்வையும் தமிழ் நெஞ்சம் அத்தனையும் நன்கு அறியும். இருப்பினும் தங்கள் மீது பொறாமைக்குணம் படைத்தோர் இறைத்துவிட்ட களங்கச் சேற்றுக்குத் தெளிவுகாட்ட இன்று எழுதப்பெறும் தங்களின் 'இயக்கம், விளக்கங்களில் சில உரைகள் என்போன்ற இளம் உள்ளங்களைத் துயரில் வாட்டுகின்றன. தமிழராகப்பிறவாவிடினும் தமிழ்படித்தரனையவர் கூட சொல்லக்கூசும் பழிமொழிகளைத் தங்கள் மீது சாற்றும் 'தமிழர்களை' எண்ணி வருந்துகின்றேன். தங்கள் அகவாழ்வினை விலாநோக உற்றுநோக்கும் இந்த நஞ்சு மதியினர் எழுப்பிடும் பொய்க்குரலுக்கு உண்மைத் தமிழர் ஒருகாலும் செவி மடுக்கார்.

-மா. அண்ணாதுரை' க. இ. கலைவாணர்பாட்டை, கரூர்.

○ தென்மொழி வெளியிட்டுள்ள கலைச்சொல்லாக்கப் பட்டியல் எம்போன்றமாணவர்களுக்கும், தமிழில் அறிவியல் பொத்தகங்கள் எழுதும் பேராசிரியர்களுக்கும் மிகப் பயன்படும். இப்பட்டியலை ஆக்கிய காரைக்குடி அழகப்பர் தமிழ் மன்றத்தினர்க்கும், வெளியிட்ட தென்மொழிக்கும் என் சார்பாகவும் எங்கள் கல்லூரி அறிவியல் திங்கள் கையெழுத்திதழ் 'வெள்ளி' சார்பாகவும் நன்றி!

–அ. வெள்ளைச்சாமிஎன்னும்தமிழ்ச்செல்வம்.தி பொ.கல்லூரி மதுரை-15.

○ பெருந்தகையே! கடந்த இரண்டை ஆண்டுக் காலமாக நம் தென்மொழியினைப் படித்துணர்ந்து வருகின்றேன். நம் தென்மொழியாம் தொன்மொழியினை உலகிற்குணர்த்ததமிழ் அரிமாவாகத் தோன்றி மிளிர்கின்றீர்கள். தமிழ் மக்களின் அகக் கண்களைத்திறக்க முயன்று வரும் தங்களுக்கு ஏற்படும் இன்னல் பலவற்றையும் அறிவோம். இன்னலில் இடர்ப்பட்டும் பீடுநடை போடும் தங்களின் தெள்ளிய உள்ளத்தோடு ஒத்துழைக்க என்னைப் போன்ற பல்லாயிரம் தமிழ் அன்பர்கள் விழைகின்றனர். தங்களின் வலக்கையாக நின்று தங்களின் பாதையில் சென்று இன்பத் தமிழினை இனிதே உலகெங்கும் உலவவிடுவோம். துஞ்சாது செயல்படும் அஞ்சாத அரிமாவே! தோள்கொடுத்துத் துணைபுரிய நாங்கள் உள்ளோம். தமிழரைத்தட்டி எழுப்பும் தங்கள் பொற்கைகள் சிவக்கும்வரை செயல் புரியுங்கள் செம்மலே!

–வீ. துரையரசன், இண்டன். வான்படை.

○ அன்பின் மிக்கீர்! கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தங்களின் தன்னிகரற்ற தமிழ்ப்பணியை அறிந்து இறும்பூதெய்துகின்றேன். அழிவுச் சேற்றில் கண்ணைத் திறந்துகொண்டு வீழ்ந்து படியும் இத் தமிழ்க் குமுகாயத்தின் தலையை நிமிர்த்தத்தாங்கள் படும்பாடு காலம் அழியினும், காலன் அழிக்கினும், கசடர்கள்–புதுமையை விரும்பாப் புல்லுருவிகள் புழுதிவாரித் தூற்றினும் மாறாதது; மாற்றற்கரியது.

-இரெ. காளிமுத்து, அஞ்சற்பிரிப்பகம், ஈரோடு-க.

○ ஐயா, இக்குமுகாயத்தில் விழிப்புணர்ச்சி ஏற்படவேண்டும் என்பதற்காக நடத்தி வருகின்ற தென்மொழியாலும் தமிழ்ச்சிட்டாலும் விழிப்படைந்து. மொழியறிவு பிறதுறையறிவு அடைந்துவரும் பலருள் இச்சிறியவனும் ஒருவன். தங்கள் நலனே தென்மொழியின் நலன். தாங்கள் ஓய்ந்துவிட்டால் தென்மொழியும் தன் தொண்டில் ஓய்ந்துவிடுமோ என்று அஞ்சுகின்றேன். ஆகையால் தாங்கள் கன்னித் தமிழைப்போல் காலமெல்லாம் வாழத் தமிழன்னையின் திருவடியில் வீழ்ந்துஇறைஞ்சுகின்றேன்.-முத்து செயராமன், எழும்பூர், சென்னை-8

தென்மொழியின் அச்சகம். கடலூர்-1

www.thamizham.net - Free E book No 7414